www.tamilarangam.net

Kaya

# மனிதம்

RAYA
87 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR -
FRANCE

5

சனநாயகத்தின் காவலர்கள்
சமாதானப் புறாக்களைப் பறக்கவிட்டாலும்
மக்கள் என்னவோ - இன்னும்
சிறைக் கம்பிகளுக்குள்ளே தான்!



மே.யூன் 90.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பழகிவிட்டது

சொந்த மண்ணிலே
அடிமைகள் ஆனோம்
தஞ்சம் புகுந்த இடத்திலும்
அடிமைகள்தான் நாம்

அங்கு இனவாதத்தால்
தாக்கப்பட்டோம்
இங்கு நிறவெறியால்
தாக்கப்படுகிறோம்

எங்கள் வரலாறு இதற்கு
பழக்கப் பட்டுவிட்டது

சொந்தத் தேசத்தில்
ஒன்று சேர்ந்து
எதிர்க்க முடியவில்லை
இங்கு நாம் எல்லாம்
எப்படி ......... ??????

- குப்பிளான் ஜெகன் -

www.tamilarangam.net

# மனிதம்!



- இந்தியப் படை விலகல்!
- அரசியல் நீரோட்டத்தில் வி.புலிகள்?
- ஜனநாயக சக்திகளுக்கு சுதந்திரம்?

1983 க்குப் பின் சுமார் ஏழு வருடங்கள் கழித்து எமது தேசம் குறிப்பாக வடக்கு - கிழக்கு பிரதேசங்களில் இன்று அமைதி நிலை!

"எப்போ இராணுவம் வீட்டிற்கு வரும்? - பிடித்துச் செல்லும்?" என்ற அச்சம்; உயிருக்கு உத்தரவாதமற்ற நிலை; இம்மென்றால் சிறைவாசம் ஏன் என்றால் வனவாசம்; இயக்கங்களால் உயிர்பறிப்பு இப்படியாக தன்படை மாற்றான்படை என்றில்லாமல் அனவரதமும் நெருக்குவாரத்தின் மத்தியில் மூச்சுத்திணறிக் கிடந்த எம் மக்கள் சுதந்திரமாக உலாவித் திரிவதற்குரிய 'அமைதி' நிலையை பெற்றிருக்கிறது எமது பிரதேசம்!

கடந்த சில வருடங்களாக சர்வதேச அரசியல் நிலைமைகள் - மாற்றங்கள் அரசியல் அவதானிகளுக்குப் பெரும் சவாலாகவே இருந்து வருகின்றன. ஆப்கானிஸ்தானிலிருந்து சோவியத் படைகளினதும், கம்பூச்சியாவிலிருந்து வியட்நாம் படைகளினதும் வெளியேற்றம் அரசியல் அவதானிகளால் எதிர்பார்க்கப்படாத

www.tamilarangam.net



நிகழ்வுகளாகவே இருந்தன. மிக அண்மைச் சம்ப
வங்களாக நிக்கரகுவாவின் பொதுத் தேர்தலில்
டானியல் ஒர்டேகா தலைமையிலான சான்டினி
ஸ்டுகளின் தோல்வியும், இலங்கையிலிருந்து இந்திய
படைகளின் வெளியேற்றமும் இறுதி நேரம்வரை
எதிர்பார்க்கப் படாதவைகளாகவே இருந்தன.
இந்தியாவில் ஆளும் கட்சி மாறினாலும் இந்தியப்படை
கள் தரித்திருப்பதில் மாற்றம் ஏற்படாது எனவும்
இந்திய இராணுவம் ஏனைய பகுதிகளில் இருந்து
வெளியேறினாலும் திருமலையில் முகாமிட்டிருக்கும்
என்றும் எதிர்பார்க்கப் பட்டது. இத்தகைய அரசியல்
நிலைமைகள் சார்பான எதிர்வு கூறலில் "மனிதம்"
உம் குறிதவறியுள்ளது.

இன்றைய அரசியல் சூழ்நிலையில் இலங்கை
யைப் பொறுத்தவரை யிலும் முன்னைய ஜனா
திபதி ஜே.ஆர் உம் இன்றைய ஜனாதிபதி பிரே
மதாசாவும் ஒரே கட்சியைச் சேர்ந்தவர்களாக
இருந்தபோதும் இவர்களுக்கு இடையிலான செய
ற்பாடுகளில் வேறுபாடுகளும் முரண்பாடுகளும்
உள்ளன. இது கட்சிக்குப் புறம்பாக தனிமனித
குணாம்சங்களும் ஆளுமைகளும் தாக்கத்தை
செலுத்துகின்றன என்பதற்கு ஓர் எடுத்துக்கா
ட்டாகும். இந்தியப் படை வெளியேற்ற விவகாரம்,
இலங்கையில் உள்ள இஸ்ரேலிய நலன்காக்கும்
பிரிவு மூடப்பட்டமை என்பன சார்பான

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பிரேமதாசாவின் நடவடிக்கைகள் இதற்கு நல்ல
உதாரணங்கள் ஆகும்.

இந்தியப்படை வெளியேற்றத்தில் பிரேமதாசாவின் கணிசமான உறுதிப்பாடு புறக்கணிக்க முடியாத ஒன்றாகும். சர்வதேச புறநெருக்கடிகளுடன் கூடவே, J.V.P யின் இந்திய எதிர்ப்பு நடவடிக்கைகளும் விடுதலைப் புலிகளின் சோர்வற்ற யுத்தமும் மறுக்க முடியாத பிரதான அம்சங்களாகும். இந்தியப் படைகளிமீது தமிழ் மக்கள் கொண்டிருந்த அதிருப்தி - கசப்பான உணர்வுகளும் அனுபவங்களும்; சிங்கள மக்களின் அச்சத்துடன் கூடிய எதிர்ப்புணர்வு என்பனவும் இலங்கை சார்பிலான காரணங்களாக இருக்க ----

மறுபுறத்தில் இந்தியாவில் ஏற்பட்ட ஆளும் கட்சி மாற்றம் - "1977 இல் ஆட்சிக்கு வந்த ஜனதா கட்சி ஆட்சிக்கு வந்த ஒரு வருடத்தில் நிலை குலைந்தது போல் வி.பி.சிங் தலைமையிலான கூட்டு அரசாங்கமும் நிலையற்றது" என்ற கருத்தை முறியடிக்க வி.பி.சிங் அரசின் பிரயத்தனம்; இலங்கையில் இந்திய இராணுவத்துக்கான செலவு நாளுக்கு மூன்று கோடி ரூபா வீதம் 32 மாதங்களுக்குரிய மொத்தச் செலவு இந்தியப் பொருளாதாரத்தில் ஏற்படுத்தியிருக்கும் தாக்கம்; மற்றும்

உள்நாட்டு வெளிநாட்டுப் பிரச்சினைகள் இரண்டையும் சமகாலத்தில் எதிர்நோக்குவதில் உள்ள சிக்கல் என்பன அயல்நாடுகளுடன் நேச உறவை பேணுவதற்கும், உள்நாட்டில் தமது அரச

www.tamilarangam.net


நிலைத்திருப்பதற்கான அரசியல் செல்வாக்கை வளர்த்துக் கொள்வதற்கான தேவையையும் வலியுறுத்தியது. இத்தகைய அரசியல் நெருக்கடிகளும் தேவைகளும் இலங்கையிலிருந்து இந்திய படைகளை வாபஸ் பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற அவசியத்தை வி.பி.சிங்கிற்கு உணர்த்தியது. மாறாக அவரது தாராள மனப்பான்மை அல்ல என்பதை நாம் வலியுறுத்தியாக வேண்டும். இதேவேளை மீண்டும் ராஜீவ் காந்தியின் ஆட்சி தொடர்ந்திருப்பின் - தமக்கு சாதகமான அடிவருடிகளின் பொம்மை ஆட்சியை 'நிலை நிறுத்தும்வரை'- இந்தியப் படைகளின் வாபஸ் நிகழ்ந்திருக்குமா என்பது கேள்விக் குறியே!

எனவே இச் சந்தர்ப்பத்தில், "நாடு தழுவிய அனைத்து தேச பக்தர்களினதும், ஜனநாயக சக்திகளினதும் ஐக்கியப்பட்ட போராட்டத்தின் மூலமே ஆக்கிரமிப்புப் படைகளை விரட்டியடிக்க முடியும்" என்று படிப்பினையூட்டிய - ஆக்கிரமிப்பாளர்களை விரட்டியடித்து விடுதலை பெற்ற - ஏனைய நாடுகளின் வரலாற்று உண்மையை நினைவு கூர்வது அவசியமாகிறது.

× × ×

இந்தியப் படைகள் வாபஸ் பெறுவதற்கு முன்பாகவே ஜனாதிபதி பிரேமதாசாவின் அரசியல் நீரோட்டத்தில் சங்கமிக்கும் நோக்கில் விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்தனர் என்பது அனைவரும்

www.tamilarangam.net



அறிந்ததே!. மேலும் இப் பேச்சுவார்த்தை வெவ்வேறு கட்டங்களாகத் தொடர்ந்து 'முன்னேற்றம்' கண்டுள்ளதாகப் பேசப்படுகிறது.

"விடுதலைப் புலியின் மக்கள் முன்னணி" என ஜனநாயகக் கட்சியாக உருமாற்றம் செய்துகொண்டு ஜனநாயக அரசியல் நீரோட்டத்தில் தன்னையும் இணைத்துக் கொண்ட ஜனநாயகவாதிகளாகத் தம்மைக் காட்டிக் கொள்கிறது விடுதலைப் புலிகள் இயக்கம்! விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் பேட்டிகளும் அறிக்கைகளும் மாத்தையாவின் மேடைப் பேச்சுகளும் இதற்குரிய ஆதாரங்களாகும்.

தமிழீழ நாயகத்துக்கு சமனான ஒரு தீர்வையும் பிரேமதாசா முன்வைப்பார் என்பது எதிர்பார்க்க முடியாத ஒன்றாகும். இதற்கு முரணாக விடுதலைப் புலிகளின் செய்திகளும் அறிக்கைகளும் இன்றுவரை அவர்களது இலட்சியமான தமிழீழ நாயகம் அல்லது அதற்கு சமனான தீர்வு என்பதனையே வலியுறுத்துகிறது. அதேநேரம் பிரேமதாசாவுடனான பேச்சுவார்த்தையில் முக்கியமான மூன்று விடயங்களில் விடுதலைப் புலிகள் உறுதியாக இருப்பதை அவதானிக்க முடிகிறது.

1. இந்தியப்படை வெளியேற்றம்
2. சிறுபான்மை இனத்தின் பாதுகாப்புக்கு இடையூறாக இருந்துவரும் 6வது திருத்தச் சட்டத்தை நீக்கல்
3. வட, கிழ. பிரதேசத்தில் சிங்கள குடியேற்றத்தை நடத்தல்

* * *

www.tamilarangam.net



எமது பிரதேசங்கள் இன்று அமைதி நிலையில் இருக்கின்றன! மக்கள் தமது சொந்த அலுவல்களை தொழில்களை அச்சமின்றிச் செய்கின்றனர். போக்குவரத்துக்கள் சிவில் நிர்வாகங்கள் சகஜமாக நிகழ்கின்றன. மாணவர்கள் கல்வியைத் தொடரும் வகையில் பாடசாலைகள், பல்கலைக் கழகங்கள் ஒழுங்கமைக்கப் பட்டுள்ளன. இந்த சைய நிகழ்வுகளைப் பார்க்கும் பட்சத்தில் நாடு அமைதியாகத்தான் இருக்கிறது!

நாட்டின் எமது பிரதேசத்தில் நிலவும் அமைதி நிலையை மக்களுக்குக் கிடைத்த ஜனநாயகம் என்று குழப்பிக்கொள்கிறார்கள் சிலர். குறைந்த பட்சம் 1984 க்கு முன்பிருந்த பேச்சுரிமை, கருத்து சுதந்திரம் இன்று இருக்கிறதா?. வாசிகசாலையில் சனசமூக நிலையங்களில், கடை தெருக்களில், சந்தைகளில்... பத்திரிகையைப் படித்து , நிகழ்வுகளைப் பார்த்து பலவித விவாதங்களில் - கருத்து மோதல்களில் ஈடுபடுவர் மக்கள். எழுத்துக் களுடாகவும் பட்டிமன்றங்களிலும் பாடசாலை மற்றும் பல்கலைக் கழகங்களிலும் மாணவர்கள் பேராசிரியர்கள் தமது கருத்துக்களை சுதந்திரமாக முன்வைப்பர். பத்திரிகைகள் தமது கருத்துக்களை வெளிப்படையாக சுதந்திரமாக எழுதும். இவை யெல்லாம் நிகழ்ந்தன 1984 க்கு முன்னர்!

ஆனால் இன்று ------

மக்கள் மௌனித்திருக்கிறார்கள் - நாடு அமைதியாக இருக்கிறது.

www.tamilarangam.net



இதுதான் உண்மை நிலை!

ஆக்கிரமிப்பாளர்கள் நாடு திரும்பிவிட்டனர்.

அவர்களோடு அடிவருடிகள் - துரோகிகள் நாட்டை விட்டே ஓடிவிட்டனர். இத் துரோகிகளுக்கு பெற்றோர் என்பதற்காக - சகோதரங்கள் என்பதற்காக - உறவினர் என்பதற்காக ஒரிசா அகதிவாழ்வில் கண்ணீரைப் பிழிந்தெடுக்கிறதே பல அப்பாவிக் குடும்பங்கள், குழந்தைகள்! - இவர்களுக்கு சொந்த மண்ணில் வாழும் ஜனநாயக உரிமை இல்லையா?

விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணி ஜனநாயக அரசியல் நீரோட்டத்தில் தம்மை இணைத்திருக்கும் இவ் வேளை---


தேச பக்தர்களும் ஜனநாயக சக்திகளும் சுதந்திரமாக தமது கருத்துக்களை முன்வைத்து நடமாட முடியுமா?. சமூகப் பொறுப்புணர்வுடன் தமது கருத்துக்களை முன்வைத்தார் பல்கலைக்கழக விரிவுரையாளர் ராஜினி திரணகம. இப் பெண்மணி தேசப்பற்று மிக்க ஜனநாயக சக்தியின் ஓர் சாட்சி! - சென்ற ஆண்டு செப்ரம்பர் மாதம் ஜனநாயக விரோதிகளால் சுட்டுக்கொல்லப் பட்டார். இன்று அமைதி நிலவும் எமது பிரதேசங்களில் இப் பெண்மணியின் ஆன்மாக்கள் சுதந்திரமாக உலா வருவதற்கு - கருத்துக்களை நேர்மையாகவும் சுதந்திரமாகவும் முன்வைப்பதற்கு ஜனநாயகம் இருக்கிறதா?--- கிடைக்குமா?

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# நமீபியா




மிக அண்மையில் ஆபிரிக்காவிலுள்ள நமீபியா எனும் நாட்டுக்கு அரசியல் சுதந்திரம் கிடைத்தது.

ஆரம்ப காலங்களில் ஜேர்மனியின் காலனி நாடாகவிருந்த நமீபியாவை பிரிட்டன் தனது ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்து, அதனை தென் ஆபிரிக்க அரசிடம் கொடுத்தது. 1948இல் தென் ஆபிரிக்க வெள்ளையர் அரசு நமீபியாவை தென்னாபிரிக்காவின் ஐந்தாவது மாநிலமாக அறிவித்து, தனது நேரடி ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்தது. இன்றைய நமீபியா 1968க்கு முன் தென்-மேற்கு ஆபிரிக்கா என அழைக்கப்பட்டது.

நமீபியா வைரம், யுரேனியம், செம்பு, தகரம், மக்னீசியம், துத்த நாகம் போன்ற உலோகப் - பொருட்களை தன்னகத்தே கொண்ட நாடாகும்.

தென் ஆபிரிக்க அரசின் காலனித்துவ நிறவெறி கொடூர அடக்கு முறைக்கு எதிராக மக்கள் "தென் மேற்கு ஆபிரிக்க மக்கள்

www.tamilarangam.net



இயக்கத்தின்" [SWAPO-சுவாப்போ] கீழ் அணி திரண்டு ஆயுதப் போராட்டத்தை முன்னெடுத்தனர். இப்போராட்டத்தை அடக்கி தனது காலனித்துவ ஆட்சியை தக்கவைக்க தென் ஆபிரிக்க நிறவெறி அரசு காட்டுமிராண்டித் தனமான அடக்கு முறைகளை கட்டவிழ்த்துவிட்டு மக்களை கொன்று குவித்தது.

இந்த நிறவெறி அரசின் அடக்கு முறைகளைக்கண்டித்து, உலக நாடுகள் தங்கள் ஆதரவை நமீபிய மக்களுக்கு வழங்கினர். ஐ.நா பொதுச்சபை நமீபிய மக்களின் தேச விடுதலைப் போராட்டத்தை அங்கீகரித்து, தென் ஆபிரிக்க அரசை நமீபியாவை விட்டு வெளியேறும் படி பல தடவை வற்புறுத்தியது. ஆனால் நிறவெறி அரசு ஐ.நாவின் கட்டளைகளை பொருட்படுத்தாமல் தனது இராணுவ ஆக்கிரமிப்பை பலப்படுத்தி மேலும் மேலும் நமீபிய மக்களை துன்புறுத்தியது. 'மனித உரிமை, நீதி, ஜனநாயகம்' என அடிக்கடி பீத்திக் கொள்ளும் அமெரிக்கா, பிரிட்டன், மேற்கு ஐரோப்பிய நாடுகள் ஐ.நாவின் தீர்மானப்படி தென்னாபிரிக்க அரசைக் கண்டிக்கவோ அல்லது அதனுடனான தொடர்புகளை துண்டிக்கவோ முன்வரவில்லை.

நமீபியாவிலுள்ள கனிவளங்களை சுரண்டுவதற்கு இந் நாடுகள் தென் ஆபிரிக்க அரசுடன் நெருங்கிய தொடர்புகளை வளர்த்தன. தென் ஆபிரிக்க அரசு அங்கோலாவில் தனது ஆதிக்கத்தை விஸ்தரிப்பதற்கு நமீபியாவை தளமாக பயன் படுத்

www.tamilarangam.net


தியது. கடந்த வருடம் நவம்பரில் நடந்த தேர்தலில் சுவாபோ [SWAPO] 53% வாக்குகளையும், எதிர்த்து போட்டியிட்ட கூட்டணி 43% வாக்குகளையும் பெற்றுள்ளன. இவ் வருடம் மார்ச் 20ம் திகதி தென்ஆபிரிக்க அரசின் நிறவெறி ஆதிக்கத்திலிருந்தும், காலனித்துவத்திலிருந்தும், நமீபியா சுதந்திரம் அடைந்துள்ளது. இன்றும் உலக நாடுகள் காலனித்துவ-ஆட்சியிலிருந்து சுதந்திரம் பெற்றாலும் ஏகாதிபத்திய நாடுகளின் நவீன சுரண்டல் ஆதிக்கத்தின் பிடியில் சிக்கியுள்ளன. அரசியல் சுதந்திரம் பெற்ற நமீபியாவும் இத்தகைய நவீன சுரண்டலிலிருந்து தப்ப முடியுமா?

o---o

- M.மணி -

## சந்திப்போம்!

ஐரோப்பிய நாடுகளில் நடைபெறும் மேதின ஊர்வலங்களில் கலந்து கொள்ளும் தொழிலாளர்கள் தாம் இங்கு சலுகை பெற்ற தொழிலாள வர்க்கமாகஇருந்து கொண்டு மேலும் சில சலுகைக்கான கோசங்களை வைத்து மேதின ஊர்வலங்களில் கலந்து கொள்வதோடும், மூன்றாம் உலக நாடுகளின் தொழிலாளர்களுக்காக குரல் கொடுத்த முன்வராத போதும், இங்குள்ள விடுதலை இயக்கங்களின் கிளைகள் இங்கு நடைபெறும் ஊர்வலங்களில் கலந்து கொண்டதன் மூலம் தாமும் உலகத் தொழிலாளர்களுடன் கைகோர்த்துள்ளோம்; அவர்களுடன் சேர்ந்து உலகத் தொழிலாளர்களுக்காக குரல் கொடுத்தோம் என்று கூறிக்கொள்வது அர்த்தமற்றதும், கேலிக்குரியதும், இங்குள்ள தொழிலாளர்களை சரிவர புரிந்து கொள்ளாத தன்மையையும் காட்டுகிறது.

www.tamilarangam.net



# நியாயங்கள்

ரஜனி

அப்பா தொடக்கம்
சமுதாயம் வரை
எங்கள் சம்மதம்
எதிர்பார்ப்பதில்லை

நிர்வாணம் மறைக்கும்
துணி தொடக்கம்
வாழ்க்கைத் துணை
வாங்குதல் எதற்குமே
எங்கள் சம்மதம்
எதிர்பார்ப்பதில்லை

அடக்கல் - அடங்கல்
வாழ்க்கை நெறியுள்
எங்களை

எங்கள் உணர்வுகள்
பலவந்தமாகப்
பலியாகும்போது ----
'கற்பிழந்தவள்'
பட்டியலுக்குள்
எமது பெயர்கள்

அப்பா தொடக்கம்
சமுதாயம் வரை
எம் மன உணர்வுகளை
என்றுமே
பலவந்தமாகத்தானே
பறிக்கிறீர்கள்

இதை
எந்தப் பட்டியலுக்குள்
பதியப் போகிறீர்கள்

ஆமாம்
பட்டியல்கள்
திறப்பதும் பதிவதும்கூட
உங்கள் விருப்பில்

உலர்ந்து போய்
இச்சைக் கிளைகளில் மட்டும்
ஈரமாகும்
தாவண்களாய்
இத்தனை நாட்களாய்...

இனியும் கூடவா
எங்கள் வாழ்க்கை
உங்கள் பட்டியலுக்குள்
பதியங்களாகவே -----!!!

www.tamilarangam.net



# ஐரோப்பாவில் : அகதிகளும் நிதி சேகரிப்பும்

ஐரோப்பிய நாடுகளில் அகதிகளாக வாழ்ந்துகொண்டிருக்கும் தமிழ் மக்களிடமிருந்து ; எமது நாட்டில் நிகழ்ந்துவரும் இன ஒடுக்கல் நடவடிக்கைகளினால் அகதிகளாக்கப்பட்ட மக்களுக்கும், ஏனைய வறிய மக்களுக்கும் உதவுவதற்கெனக் கடந்த பலவருடங்களாகப் பல்வேறுவழிகளில் பணம் சேகரிக்கப்பட்டுவருவது சகலரும் அறிந்ததே. இப்பணம் சேகரிக்கும் நடவடிக்கைகளை ; ஈழவிடுதலை அமைப்புக்கள் என்று கூறிக்கொண்டவர்களும், ஐரோப்பிய மக்களால் நடாத்தப்படும் உதவிநிறுவனங்களுடன் இணைந்து செயற்படுபவர்களும், ஒருசில தனிநபருமாகத் தென்னியந்தியத் திரைப்படக்கலைஞர்களை அழைத்து நிகழ்ச்சிகள் நடாத்துதல், இலங்கை "இசைக்கலைஞர்களை" அழைத்துப் பாடல்கள், இசை நிகழ்ச்சிகளை நடாத்துதல், தென்னிந்திய திரைப்படங்களை இங்குள்ள திரையரங்குகளில் காண்பித்தல் போன்ற செயற்பாடுகள் மூலம் மக்களிடமிருந்து பணம் வசூலிக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

இவ்வாறான நிகழ்ச்சிகளின் மூலம் பணம் சேகரிப்பவர்களுக்கு ; அதனை மக்களிடம் இருந்து எவ்வாறான முறையில், எத்தகைய வேலைத்திட்டங்களை முன்வைத்துச் சேகரிக்கவேண்டும் என்ற எந்த விதமான பார்வையும் இல்லாதிருப்பது வேதனைக்குரிய ஒரு விடயமாகும். உண்மையிலேயே துன்பப்படும் மக்களுக்கு உதவுவதற்காகப் பெறப்படும் ஒவ்வொரு ரூபாவும் உணர்வு ரீதியாகவே பெறப்படவேண்டும். அதைவிடுத்து இலகுவாக எதுவித சிரமமும் இன்றி இவ்வாறான நிகழ்ச்சிகளை ஒழுங்குசெய்து அவற்றினைக் காட்டி

www.tamilarangam.net



மக்களை மயக்கிப் பணத்தைப் பெறும் முயற்சியாகவே இதனைக் கருத இடமுண்டு. அத்துடன், பணத்தைச் செலுத்தும் மக்களும் தாம் துன்பப்படும் மக்களுக்கு உதவிசெய்கின்றோம் என்ற உணர்வில்லாது நிகழ்ச்சிகளைப் பார்த்து ரசிப்பதற்கே பணம் செலுத்துகின்றோம் என்ற சிந்தனையை உருவாக்கிவிடுகிறது. இத்தன்மையானது ஏற்கனவே ஐரோப்பிய நச்சுக்கலாச்சாரத்தினாலும், சொந்த நாட்டிலிருந்து நீண்ட நாட்கள் பிரிந்திருக்கும் நிலையினாலும் எமது நாட்டில் நடைபெறும் நிகழ்வுகளில் இருந்து அந்நியப்பட்டிருக்கும் எமது மக்களை மேலும் அந்நியப்படுத்தவே இந்நடவடிக்கைகள் உதவமுடியும். அத்துடன் உண்மையிலேயே நல்லநோக்கத்திற்காக இந்நடவடிக்கைகளில் ஈடு படுபவர்களும் உழைப்பட்டு மக்கள் மத்தியிலிருந்து அந்நியப்படவும் இதில் நிறைய வாய்ப்புக்கள் உள்ளது. அதுமட்டுமன்றி இவ்வாறான வழிகள் மூலமாக மட்டும்தான் துன்புறும் மக்களுக்கு; இங்குள்ளவர்களி டமிருந்து பணம் பெறமுடியும் என்ற நிலையை ஏற்படுத்திவிடும்.

அடுத்து; இவர்களால் நடாத்தப்படும் நிகழ்ச்சிகளையும் அதன் தரத்தினையும் நோக்குவோமானால், தென்னிந்தியத் திரைப்படக் கலைஞர்க ளால் தயாரிக்கப்பட்டு ஏற்கனவே Video , Audio மூலமாகப் பார்த்து, கேட்டு, ரசித்த அதே நிகழ்ச்சிகளை அதைவிடக் குறைந்த தரத்திலேயே இங்கு நிகழ்த்துகின்றார்கள். இவர்கள் தாமும் இலங்கையில் கஷ்டப்ப டும் மக்களுக்கு உதவுவதற்காகவே இவ்வாறான நிகழ்ச்சிகளை வழங்க முன்வந்துள்ளோம் எனக்கூறிக் கொள்கின்றபோதிலும், எந்தவிதமான பயனுள்ள கருத்தினையும் மக்களுக்குக் கூறுவதில்லை. வழங்குவதெல்லாம் ஆபாச, , சீரழிவு வசனங்களாகவே அமைந்துள்ளன. பார்த்து ரசித்த அனைவருக்கும் இது நினைவிருக்கும். ஏனெனில், கடந்த 10 வருடங்களாக நிகழ்ந்துவரும் எமது நாட்டின் போராட்ட

www.tamilarangam.net



நிகழ்வுகளை மையமாக வைத்து ஒரு திரைப்படத்தைக்கூடத் தயாரிக்கமுடியாத இக்கும்பல் பணத்திற்காகவும், உல்லாச வெளிநாடுகளின் எமது பணத்தில் சுற்றிவிட்டுச் செல்வதற்கும் கூறும் பசப்புவார்த்தைகள்தாம் இவை. அத்துடன் இந்நிகழ்ச்சிகளை நடத்தும் "கலைஞர்களது" தனிப்பட்ட ஒழுக்கங்களும் இவர்கள் விமானம் ஏறுமுன்பே செய்திகளாகப் பரவுகின்றன.

இலங்கைக் கலைஞர்களை எடுத்துக்கொண்டால் இவர்களும் எமது நாட்டிற்கான தனித்துவமான நிகழ்ச்சிகளைத் தயாரிக்காது இந்திய சினிமா சீரழிவுகளையே பிரதிபண்ணி நிகழ்ச்சிகளை வழங்குகின்றனர். அத்துடன் இவர்கள் அனைவரும் இலங்கை அரசின் வானொலி, தொலைக்காட்சி நிலையங்களில் அங்கம் வகிப்பதனால் எமது நாட்டுப் பிரச்சினைகளைப் பிரதிபலிக்கக்கூடிய நிகழ்ச்சிகளைத் தயாரித்தளிக்க முன்வரமாட்டார்கள்.

அடுத்து; இங்குள்ள திரையரங்குகளை வாடகைக்கு அமர்த்தி தமிழ் சினிமாப்படங்களைக் காட்டிப் பணம் சேகரிக்கும் நடவடிக்கை தற்போது வேகமாக வளர்ந்துவருகிறது. இதில் வியாபார நோக்கங்கொண்ட தனியார்தான் அதிகம் ஈடுபடுகின்றபோதிலும், இயக்கங்கள் தலையிட்டுக் கப்பம் கோரும் நடவடிக்கைகளும் இடம்பெறுகின்றன. இந்திய சினிமாவானது அந்தநாட்டிலுள்ள; வறுமையாலும் , பட்டினியாலும் அடிப்படைவசதிகள் எதுவுமற்ற பலகோடிக்கணக்கான மக்களை, அவற்றுக்கெதிராக ஒன்றுபட்டுப் போராடவிடாது தடுப்பதில் எவ்வளவு பங்கு வகிக்கின்றதோ அதனையே எமது மக்கள் மத்தியிலும் நீண்டகாலத்தில் ஏற்படுத்தலாம். அத்துடன் இந்நிகழ்ச்சிகளை ஒழுங்குசெய்பவர்கள் இந்திய சினிமாக் கலாச்சாரம்

www.tamilarangam.net



தான் தமிழ்மக்களினது கலாச்சாரமென ஐரோப்பிய மக்களுக்கும் இங்கு வாழும் குழந்தைகளுக்கும் கூறிவிடுவது மிகவும் ஆபத்தான செயலாகும்.

மேலும் இவ்வாறான நிகழ்ச்சிகளை நிகழ்த்துபவர்களில் பலர் எந்நோக்கத்திற்காக நிதி சேகரிக்க இந்நிகழ்ச்சிகளை நடத்துகின்றனர், இவ்வாறு சேர்ந்த பணத்தின்மூலம் என்ன நடவடிக்கைகளை எமது நாட்டிலே மேற்கொண்டுள்ளோம், எதிர்காலத்தில் எந்நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளோம் என்பவைபற்றிய எதுவிதமான தகவல்களையும் மக்களுக்கு வழங்குவதில்லை. மக்களும் இதுபற்றி எதுவித கேள்விகளையும் இவர்களைக் கேட்பதில்லை. அவ்வாறான கேள்வி கேட்கும் ஒருசிலருக்கும் இவர்கள் பொறுப்பற்ற பதில்களையே கொடுக்கின்றனர். அதாவது; நிகழ்ச்சி நடத்துவதற்குரிய பணம்தான் சேர்ந்தது, அதனால் நட்டம் ஏற்பட்டது, நிகழ்ச்சிக்கான கட்டணம்தான் அறவிடப்பட்டது போன்றவையே இவர்களது பதில்களாக உள்ளன. இவ்வாறான அமைப்புக்களில் ஈடுபட்ட பல உறுப்பினர்கள் இப் பணங்களைக் கையாடி கனடா தப்பிச்சென்ற நிகழ்வுகளும் உண்டு.

எனவே இவர்கள் மக்களுக்கு உதவவேண்டும் என்ற நோக்கம் இருந்தால் பின்வரும் முறைகளில் பணம் சேகரிப்பது பயனுள்ளதாகும். அதாவது, மேற்கூறியவாறான பிற்போக்கு நிகழ்ச்சிகளை நிராகரிப்பதும், இன்று எம்மக்கள் மத்தியில் உள்ள கலையார்வமுள்ளவர்களைக் கண்டறிந்து, அவர்களுக்கூடாக எமது நாட்டின் இன்றைய சூழ்நிலையைப் பிரதிபலிக்கக்கூடிய நிகழ்ச்சிகளைத் தயாரித்து வழங்குவது சிறந்ததாக இருக்கும். இதன்மூலம் எம்மத்தியிலுள்ள கலை ஆர்வம் உள்ளவர்களை ஊக்கு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



விப்பதுடன், இந்திய இலங்கைக் கலைஞர்களுக்கு விரயமாக்கும் பணத்தின் அளவினையும் பயனுள்ளதாக்க முடியும். மேலும் இங்கு திரையிடப்படும் படங்களைத் தவிர்த்து இந்தியாவிலும் ஏனைய சர்வதேச நாடுகளிலும் ஒடுக்கப்பட்டமக்களின் உணர்வுரீதியான போராட்டங்களையும், அவர்களது வாழ்க்கைமுறையினையும் மையமாகவைத்து எத்தனையோ படங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. இவற்றினை சரியான முறையில் பயன்படுத்துவதன் மூலம் எமது போராட்டம்பற்றிய உத்வேகத்தைக் கொடுப்பதுடன் நல்ல கலையம்சத்தை வளர்க்கக்கூடியதாகவும் இருக்கும்.

அகதிகளுக்கும், வறியமக்களுக்கும் இன்றைய சூழ்நிலையில் நாம் உதவவேண்டும் என்பது இன்று எம்முன்னுள்ள முக்கிய கடமைகளில் ஒன்றுமட்டுமே. இவ்வாறான உதவிகளை மக்களுக்குச் செய்யவேண்டுமென விரும்புவோர் இதனுடன் மட்டும் திருப்தியடைந்துவிடாமல் மேலும் அகதிகளாக்கப்பட்டுக் கொண்டிருப்பதைத் தடுப்பதற்கு முயற்சிக்கவேண்டும். அகதிகளுக்கு உதவுவதென்பது ஒரு நோயாளியைக் குணமாக்க உதவுவது போன்றதாகும். அதாவது ஒரு நோயாளியைக் குணமாக்கும் போது அதற்கான சிகிச்சைமுறைகளைக் கையாள்தல் வேண்டும். அதே சமயம் இவன்ரை நோயாளியாக்கும் காரணிகளையும் கண்டறிந்து அவற்றைக் களைய முயற்சிப்பதன் மூலமே ஒட்டுமொத்தமாக ஆரோக்கிய சமூகத்தை உருவாக்கமுடியும்.

• K.சுதன் •

சுவிஸ்: சிறுவர் பாடசாலையில் தமிழ் பிஞ்சுகளின் வேதனை சென்ற இதழில் ஆரம்பித்த இக் கட்டுரையின் தொடர்ச்சி அடுத்த இதழில் வரும்.

www.tamilarangam.net



# பாலம்

## திரைப்பட விமர்சனம்



இது போராட்டம் பற்றிய வித்தியாசமான படம் துக்ளக் சோ, வன்னியர் சங்கத் தலைவர் ராமதாஸ், டாக்டர் அம்பேத்கார் சங்கத் தலைவர் என்று எல்லோரையும் பேட்டி கண்டு படத்திலே இணைத்திருக்கிறார்கள் என்று நண்பர்கள் சிலர் கூறினார்கள். தமிழ்ப்படத்திலே புரட்சியா அப்படியாராவது வந்து வித்தியாசமாய் ஏதோ படம் எடுத்துவிட்டார்களா என்ற நப்பாசையில் படத்தைப் பார்த்தால் நாமம்தான்.

எல்லாம் பழைய கதைதான்; கூலிஉயர்வு கேட்டு பண்ணையார் வயலில் வேலை செய்யமாட்டோம் என்றதற்காகவும் பண்ணையார் இல்லாமல் திருமணம் நடத்தி பண்ணையாரை அவமதித்துவிட்டதற்காகவும், நாயகன் முரளியின் அண்ணனையும், அவன் குடும்பத்தையும் பழிவாங்குவதற்காக அண்ணியைக் கற்பழிக்கிறான் பண்ணையார். தனது குற்றங்களை மறைக்க முரளியின் அண்ணனையும், அண்ணியையும் கொள்ளையடித்தனர் என்றும், தன்னைக் கொல்ல முயன்றதாகவும் குற்றம்சாட்டி போலீசின் உதவியுடன் சிறையில் தள்ளுகின்றான். சென்டிமென்டுக்குவரும் பேபி இந்திராபாணி குடுபான தங்கை; தன்னிடமிருந்து தப்பிய அவளையும் பிடித்துவர அடிட்களை அனுப்புகிறான் பண்ணையார். ஊருக்கு வரும் அண்ணன் முரளி வழமையான தமிழ்ப்பட கதாநாயகன் பாணியில் முரடர்களிடமிருந்து தங்கையைக் காப்பாற்றுகிறான். ஒருவருடத்தின் பின் பண்ணையார் மந்திரி

www.tamilarangam.net


யாகிறான். போலிசு கைது செய்த தனது நண்பர்களையும் அண்ணனையும், அண்ணியையும் விடுதலை செய்யவேண்டும் என்ற நிபந்தனையை வைத்து மந்திரியை (பழைய பண்ணையார்) கடத்திவந்து பாலம் ஒன்றில் பணயம் வைக்கிறான் முரளி. அவர்களை விடுதலை செய்யாவிட்டால் மந்திரியைக் கொல்லப்போவதாக மிரட்டுகிறான்! மந்திரியைக் காப்பாற்ற தமிழகப் பொலிசு, மன்னிக்கவும்! தமிழ்ப்பட போலிசு எடுக்கும் கோமாளித்தனமான நடவடிக்கைகள். இவற்றை முறியடிக்கும் சர்வ வல்லமை படைத்த நாயகனான முரளி, என்று கதையில் முக்கால்வாசிவரை பாலத்தில் போகிறது. கடைசியில் அரசு பணிந்து முரளி கேட்ட நிபந்தனைகளுக்கு கட்டுப்பட்டு அண்ணனையும், மற்றவர்களையும் விடுவிக்க வரும்போது 'கிளைமாக்சில்' இன்ஸ்பெக்டர் திடீர் முரளியைச் சுட, குண்டடிபட்ட முரளி எழுந்து மீண்டும் மந்திரியைச் சுட, என்று ஒரு மாதிரியாக இருவரும் சாவுடன் படமும் முடிகிறது.

ஆரம்பத்தில் முரளி: சமூக அமைப்பையும் அரசியல் அமைப்பையும் மாற்றவேண்டும்......, இந்த நாடு 80 பெரிய பணக்காரர்களின் கையில்தான் இருக்கிறது....., போலிசு சட்டம் எல்லாம் யார் பக்கம்,...... என்றெல்லாம் டயலாக் அடிக்கிறாரே இவற்றைப் பார்த்தால் ஏதோ புரட்சி நடத்தப் போவது போலதான் இருக்கும். ஆனால் நடத்தியதோ வெறும் பித்தலாட்டம். முரளி என்ன சமூகப்புரட்சியா செய்தார். தனது அண்ணன் குடும்பத்தையும் நண்பர்களையும் விடுவிக்கக்கோரித்தானே மந்திரியை கடத்தி பணயம் வைத்தார். தனது குடும்பம் பழிவாங்கப்படும்போது கொதித்தெழுந்த நாயகன்; அதை சமூகத்தில் நிலவும் அநீதியாக இனங்கண்டு தனது பாதையை மாற்றியமைத்திருந்தால், அது உற்றுநோக்கப்படவேண்டியதே. ஆனால் படத்தில் அப்படி எதுவும் இருக்கவில்லையே! பாலத்தில் மக்களைப்பற்றிய, சமுதாயத்தைப்பற்றிய, அக்கறை அல்லது நலன் ஏதாவது இருக்கின்றதா புரட்சியென்று ரீல் விட்டுவிட்டு வெறும் தனிநபர் பழிவாங்கல் நடவடிக்கைகளு

www.tamilarangam.net



க்கு சிவப்பு வசனங்களைப் பேசுகிறான் முரளி. "புரட்சியென்றால் அதுவேற மாதிரி....." என்று கண்ணை சொருகிக்கொண்டு புரட்சியைக் கொச்சை படுத்தும் பாணியில் பண்ணையாரின் கையாட்களைப்பார்த்து முரளியின் அண்ணனாக நடிப்பவர் கூறுகிறாரே, அப்போ நாங்களும் புரிந்து கொண்டோம் டைரக்டரே, புரட்சி நிச்சயமாய் உங்கள்பாணியில் இல்லை.

அது சரி டைரக்டரே! உங்களுக்கு தனிநபர் பழிவாங்கல் நடவடிக்கைகள் மட்டும் புரட்சியாய் தெரிந்தால், ஏதோ பிழைப்பு நடத்துறீங்களே என்று பத்தோட பதினொன்றாக இதையும் ஒதுக்கி விடலாம். நீங்கள் செய்தது என்ன? படத்தின் இடையில் T.V சார்பில் வன்னியர் சங்கத்தலைவர் ராமதாசிடமும், டாக்டர் அம்பேத்கார் சங்கத்தலைவரிடமும், பாலத்தில் பணயம் வைத்தது சரியா என்று பேட்டி கண்டதற்கு, அவர்களும் முரளியின் நடவடிக்கை சட்டப்படி தவறு, ஆனால் சட்டத்தைக் காப்பாற்றுபவர்களே தவறுகளுக்கு காரணமாய் இருக்கும் போது முரளியின் நடவடிக்கை சரியானது என்று அவர்கள் கூறுவதுடன் எமக்கு உடன்பாடு இல்லை. ஆனால் துக்ளக் சோவின் பேட்டி தான் "பாலத்தின்" நோக்கத்தை வெளிச்சம் போடுகிறது. சோ கூறுகிறார் இந்தியாவிலே மனித உரிமையை மதிப்பது முன்னேற்றமடைந்திருக்கிறது என்றும், ஒரு போஸ்காட் எழுதி உயர்நீதிமன்றத்திற்குப் போட்டால் நீதிகிடைத்து விடும் என்கிறாரே, "ஆயிரக்கணக்கான அப்பாவிப் பொதுமக்கள் போபால் விசவாயுப் படுகொலையால் பாதிக்கப்பட்டதற்கே உயர்நீதிமன்றத்தில் நீதி கிடைக்கவில்லையாம் சாதாரண தனிநபர்களின் நிலையை நினைத்துக் கூடப் பார்க்க முடியுமா?" பத்திரிகைச் சுதந்திரம் இருக்கிறது என்று கூறுகிறாரே அதுக்கு கூட பூட்டுப் போட முனைந்து பத்திரிகையாளர்களின் ஒன்றிணைந்த நடவடிக்கைகளால் முறியடிக்கப் படவில்லையா? மீனவ நண்பன் முதலமைச்சராக இருந்த காலத்தில், நடந்த சென்னை மெரீனா பீச் மீனவர்களைப் போலீசு படுகொலை செய்த விடயத்தில், அரசுக்குச் சார்பாய் நின்று கொண்டு பொய்களை எழுதினவர் தானே இந்தச் சோ. மேலும் ஆயுதங்கள் எங்கிரு

(தொடர்ச்சி 26 ம் பக்கம்)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பெண்ணடிமைத் தனமும் பெண் நிலை வாதமும்



தமிழ் தேசிய இனத்தின் விடுதலைக்கான போராட்டம் வலுப்பெற்றிருந்த 70ம் ஆண்டுகளின் இறுதிக் காலகட்டத்தில் எமது சமூகத்தில் 'பெண் விடுதலை' பெண்கள் எழுச்சி என்ற கருத்தும் அழுத்தமாக ஒலிக்கத் தொடங்கியது.

தூரத்தில் காக்கிச் சட்டையைப் பார்த்தாலேயே பொலிஸ் என ஓலமிட்டு வீட்டுப்படலையை இழுத்துச் சாத்திவிட்டு உள்ளே பதுங்கி ஒடுங்கிய பெண்களை எமது தேசத்தில் இன்று எந்தக் கிராமத்திலும் காண்பது அரிதுதான். இரண்டுக்கு மேற்பட்ட தொடர் அந்நியப் படைகளின் யுத்த அனர்த்தங்கள்; எமது பெண்களை சமூகரீதியாக அடக்கி வைத்திருக்கும் கட்டுப்பாட்டுச் சுவர்களிலும் சிறிய உடைவுக

www.tamilarangam.net



னை ஏற்படுத்தித்தான் இருக்கிறது. யுத்த காலங்களில் விடுதலைப் போராளிகளுக்கு உதவுவதில் கணிசமான பங்களிப்பைச் செலுத்தியும், அந்நியப் படைகளுக்கு எதிராக ஊர்வலங்கள், போராட்டங்கள் நடத்தியும் போராட்ட களத்தினில் தங்களையும் இணைத்திருக்கிறார்கள். எமது பெண்கள், குறிப்பாக அன்னையர் முன்னணி தலைமையிலான போராட்டங்களை முன்னுதாரணமாகக் கொள்ளலாம். மேலும்; "இந்தியப் படைகளினால் கைது செய்யப்பட்ட சக தொழிலாளியின் விடுதலைக்காக திருநெல்வேலி தொழிற்சாலைப் பெண்கள் போராடியமை; 1986 காலப்பகுதியில் விடுதலை இயக்கங்களுக்கிடையிலான இயக்க அழிப்புப் போட்டியில் தாக்கப்படும் இயக்க உறுப்பினர்களுக்கு கிழக்கு மாகாணத்தில் பெண்கள் உதவியமை" போன்றவைகள் சிறு சம்பவங்களாக இருப்பினும் எமது பெண்களின் போராட்ட உணர்வுகளின் வளர்ச்சியாக நாம் பார்க்கலாம்.

நெருக்கடியான யுத்தகாலங்களில் ஆண்கள் அகதிகளாக வெளிநாடுகளுக்கு வெளியேறிக் கொண்டிருக்கும் நிலைமையில் அதிகமான குடும்பங்களில் தலைப்பொறுப்புக்களை பெண்களே வகித்துக் கொண்டார்கள். ஆம்! எமது சமூகத்தில் வாழ்வின் விழுமியங்கள் சீரழிவுப் பாதைக்கு இழுத்துச் செல்லப்பட்ட நிலையில் அநீதிகளுக்கு எதிராக குரல்கொடுக்கவும், போராடவும் எமது பெண்கள் 30 வருடங்களுக்கு முன்பு இருந்த நிலையிலிருந்து இன்று முன்னேறிக் வருகிறார்கள்.

இந்த பெண்கள் மத்தியிலான வளர்ச்சிகள் மாற்றங்கள் தேசிய விடுதலையின் நோக்கத்திலோ, அல்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வது உந்து சக்திபெறும்போதான் அதுவும் சமூக ஒட்டு மொத்த பெண்கள் தொகையில் ஒரு குறிப்பிட்ட விகிதத்துக்குள்ளேயே அடங்குகின்றது. எமது பெண்கள் நடத்திய போராட்டங்கள், செயற்பாடுகள் குறைவாக இருக்கின்றதென்பதற்காக அதன் பெறுமானத்தை நாம் கருத்தில் கொள்ளாமல் விடக்கூடாது.

ஒடுக்கப்படும் தேசிய இனத்தின் விடுதலையில் ஆர்வம் கொள்ளும் எமது பெண்கள் தாமும் இந்த இனத்துள் மேலும் ஒடுக்கப்படும் ஒரு பிரிவினர் (பெண்ணடிமைத்தனம்) என்பதுபற்றி எவ்வளவுபேர் அறிவுபூர்வமாக விளங்கியுள்ளனர் என்றால் அதனளவும் எம் பெண்கள் தொகையில் மிகவும் குறுகியதாகவே இருப்பதைக் காணலாம்.

பல நூற்றாண்டு வரலாற்றுத் தொடரான இந்து மத சடங்கு, சம்பிரதாயங்களில் ஆழமாக ஊறியிருப்பதும்; நிலவுடமைச் சமூகத்தின் எச்சசொச்சங்களை இன்னமும் எமது பெண்கள் பாரம்பரிய பண்பாடுகளாகப் போற்றிக் கொள்வதுமே எமது சமூகத்தில் பெண்கள் இரண்டாம்படி நிலைக்குத் தள்ளப்படுவதற்கான முக்கிய காரணியாகிறது.

தாயாகவும், தாரமாகவும், பாலியல் சுகம்தரும் பதுமையாகவும், பஞ்சகல்யாணிகளாகவுமே பெண்களைக் கணிப்பிடுகிறது எமது பண்டைய சமூகம். 'பெண் என்பவள் ஆணுக்குக்கீழ் நிலையில் உள்ளவள்' இப்படித்தான் புராதன இதிகாசக் கதைகள் எமக்குப் போதிக்கின்றன. கற்புக்கரசிகளாகக் கண்ணகியும், சீதையும், சாவித்திரியும், ......, இன்னமும் பாடப்புத்தகங்களிலும் கலை நிகழ்ச்சிகளி

www.tamilarangam.net



ளும் ஆதிக்கம் செலுத்தும் பெண்களை நோக்கும் சமூகப் பண்பாட்டுப் பார்வைகள்.....

சீதையைத் தீக்குளிக்கச் சொன்னான் இராமன். ஏன் இராமனை தீக்குளிக்கும்படி சீதை கேட்கவில்லை...? இங்குதான் ஆணாதிக்க சமூக அமைப்பின் முகவிகாரம் தெரிகிறது. மனித இனம் தோன்றிய காலத்திலேயும் சமூகத்தில் ஆண் தலைமைகள் இருந்திருக்கின்றனவா? இல்லை என்றார் அறிஞர் மார்க்ஸ். இவர்தான் மனிதன் வர்க்கங்களாக உடைபடாத வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தின் நிலைமைகள் பற்றிய கண்டுபிடிப்புகளைச் செய்தவர். இவரின் கருத்துப்படி புராதன சமூகத்தில் ஆண் தலைமை கிடையாது. பெண்தான் குழுக்களுக்குத் தலைமை வகித்தாள். குழுக்களாக இணைத்ததும் ஆதிக்கம் செலுத்தியதும் பெண்தான் என்று குறிப்பிடுகின்றார்.

எமது தேசத்தில் இனங்களுக்கிடையிலான முரண்பாடு மேலோங்கியிருந்து வந்ததால் பெண்ணடிமைத்தனம் சம்பந்தமாகவோ, சமூகத்தில் ஆழப்படிந்திருக்கும் சாதி, சீதனம் போன்ற நில உடைமைச் சமூகத்தின் எச்சசொச்ச ஒடுக்குமுறை வடிவங்களையோ எமது பெண்கள் பெரிது படுத்திச் சிந்திக்கவில்லை. எமது பெண்களைப் பொறுத்தவரையில், சமூகரீதியாக ஒடுக்கப் பயன்படுத்தப்படும் வடிவங்களை இன்னமும் இவர்கள் 'பண்பாடு', 'கலாச்சாரம்' என்று போற்றிக்கொள்வதுதான் வேதனைக்குரியதாகிறது.

பெண் என்பவள் கணவனையும் பிள்ளைகளையும் பராமரிக்க வேண்டும்; கற்பு, நாணம், பணிவு இவைகள் நிறைந்தவளாக இருக்க வேண்டும். அடுப்பு முதல் உடுப்பு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



துறையல்வரையான வீட்டுவேலைகளைப் பெண்கள்தான் செய்யவேண்டும், இப்படி எமது சமூகத்தில் பெண்ணுக்கு மட்டுமே தனியாக ஒதுக்கப்பட்டுள்ள கடமைகள் யாவும் ஒரு பிராமணன் தன் மகளுக்குக் கூறும் அறிவுரைகளாக 15 ம் நூற்றாண்டில் எழுதப்பட்டுள்ள 'கஷிய சேகர' என்ற இலக்கிய நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நூலின் பிராமணனின் அறிவுரையைத்தான் இந்துமத ரீதியான பெண்ணுக்குரிய கட்டுப்பாடுகள் எனக்கூறி ஆணுக்கு சமூகத்திற்கு சேவை செய்வதற்கான போதனையைக் கொடுக்கிறது.

(தொடரும்)

---

..... 21 ம் பக்க தொடர்ச்சி

ந்து வந்தது, வெளிநாட்டு சதி, யார் பின்னணி...... இவையெல்லாம் முளையிலேயே கிள்ளியெறியவேண்டும் என்கிறாரே ஏதோ ஆய்வு செய்தது போல. இந்த ராமசாமி சோவுக்கு தெரியாதா? சமூகத்தில் இவ்வாறான தனிநபர் பழிவாங்கல்கள், நியாயமான கிளர்ச்சிகள், எழுவதற்கான காரணங்கள் என்னவென்று. இக்காரணிகளை துடைத்தெறிவதன் மூலம்தான் இப்படியான தனிநபர் பழிவாங்கல்கள் எழாதவாறு பார்த்துக் கொள்ள முடியும்.

வெளிநாட்டு ஆயுதங்கள் எங்கிருந்து வந்தன என்று கேட்கும் சோவின் கருத்துக்காகவே நவீன ஆயுதங்களை இளைஞர்களின் கைகளில் திணிக்கிறார் டைரக்டர்.

படத்தின் இறுதியில் "வன்முறையென்பது இருபக்கமும் கூரிய ஆயுதம் அதுபயன்படுத்துகிறவனையும் அழித்துவிடும்" என்ற அண்ணாத்துரையின் செத்த தத்துவத்திற்கு உயிரூட்ட கடும் பிரயத்தனம் எடுக்கிறார் டைரக்டர். அதற்காகவே கிளைமாக்ஸில், நாயகன் முரளியையும் காவு கொள்கிறது பாலம். மொத்தத்தில் தகர்க்கப்படவேண்டிய பாலம் மன்னிக்கவும் படம்.

- நரசிம்மன் -

www.tamilarangam.net



# கருவறை வேதங்கள்

- கமலினி -

இரு கருக்கள் முட்டி மோதி
கருப்பையில் பதிந்தபோது
தெரிந்தது எனக்கு
பெண்களின் உலகம்
நினைத்தவையோ அங்கு ஏராளம்!

சுவரில் ஒட்டியிருக்கும்போது
ஒருநாள்
கூறுகிறாள் அம்மா
அடக்கமாயிரு
நினைத்தபடியெல்லாம் திரியாதே
கண்டபடி அதிகம் கதைக்காதே
வீட்டு வேலையைக் கவனி
கூறியவை எல்லாம் என்
முன் பிறந்தவளுக்கு
ஏங்கினேன் நானும்.

வளர்ந்தேன்
பிரசவமானேன்
மீண்டும் வளர்ந்தேன்
வந்தது என் அக்காவிற்கு
மணநாள்
அன்று எனக்கு வயது பத்து!

www.tamilarangam.net


எல்லோரும் நிறையக் கொடுத்தார்கள்
நான் கொடுத்தது
இதுதான்
கற்றுத் தந்த
அம்மாவிற்கும்
மற்றவர்க்கும் சொல்லாதே
இப்போ நீ கற்றவற்றை !

ஆம்
காலத்தை வீணாக்கி
கருத்தில் ஒன்றை ஏந்திவிட்டாய்
அதுதான்
ஒடுக்குமுறை பாதையில் நீ
கரைசேரும்
வெளிச்ச வீடு

உன் வேகத்திற்கு ஓய்வு
கிடையாதோ.. ?

தாவரங்கள் சமைத்து வைத்த
சூரியச் சக்தியைப் போல்
சிறைப்பிடிக்கப் படுகிறது
எங்கள் சிந்திக்கும் உரிமை
என்றோ ஓர்நாள் சங்கமிக்கும்
எம் சிந்தனைகள்
தகர்த்தெறியும் இவ் விலங்கினையும் !

• •✦• •

www.tamilarangam.net



# மே தினம்

மேதினம் என்பதே தொழிலாளர்களின் தினம் என்ற கருத்து மறைந்து வருகின்ற இந்த காலகட்டத்தில், மேதினத்தின் உண்மையான அர்த்தத்தையும், அதன் தாற்பரியத்தையும் தெரிய வைப்பதே இன்று நம் முன்னுள்ள கடமையாகிறது.

1886 ஆம் ஆண்டு! அமெரிக்கா-விலுள்ள சிக்காகோ நகரின் வீதிகள் தொழிலாளர் இரத்தத்தால் நனைந்திருந்த காலம்! அமெரிக்கத் தொழிலாளர்கள் தங்கள் வேலை நேரத்தை எட்டு மணித்தியாலங்கள் ஆக்கும்படியும், மற்றும் பிற கோரிக்கைகளுக்காகவும் போராடி சாதனை படைத்த தினம். மேதினம் உருவாக நேரடியான காரண-மாயிருந்த போராட்டங்கள் 1884 ல். அமெரிக்காவில் எட்டுமணி நேர இயக்கத்தின் போதே துவக்கப்பட்டது. இருப்பினும், அதற்கு முந்திய தலைமுறையிலேயே அமெரிக்க தொழிலாள வர்க்கத்தின் போர்க்குணமிக்க ஸ்தாபனமாக விளங்கிய "தேசிய தொழிற் சங்கம்" குறைந்த நேரத்துக்கான வேலை என்ற கோரிக்கையை முன் வைத்து அதற்காக பரந்த அளவில் ஒரு இயக்-கத்தையே நடத்தியது. இத்தகைய இயக்க போக்கில் வளர்ந்து வந்த போராட்டங்கள் 1886 இல் உச்ச நிலையை அடைந்தன. அமெரிக்க தொழிற்சங்கங்களும், தொழிலாளர் கட்சிகளும் போராட்டத்தில் ஒற்றுமையாக ஒரணிவகுத்து நின்றன. இத்தகைய காலத்தில் தான்

www.tamilarangam.net



தொழிலாளர்களின் உழைப்பை உறிஞ்சி வாழ்ந்த தொழிலதிபர்களும் அவர்களின் பிரதிநிதித்துவப் படுத்திய அரசும் கிலி பிடித்துப் போயிருந்தன. இதற்கு முன்பு பல்வேறு இடங்களிலும் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் வேலை நிறுத்தங்களும், ஆர்ப்பாட்டங்களும் நடை-பெற்றிருந்த போதும்; 1885 இல் நடைபெற்ற தொழிலாளர் கூட்டமைப்பின் மாநாட்டு தீர்மானத்-திற்கேற்ப 1886 மே முதல் தினமன்று பொது வேலை நிறுத்த அழைப்பை ஏற்று அனைத்து தொழி-லாளர்களும் போராட்டத்தில் இணைந்து கொண்டனர். போராட்டத் தயாரிப்பு வேலைகளுக்கென 8 மணி நேர வேலைக்கான குழு அமைக்கப்பட்டிருந்தது. ஆனாலும் அன்றும் கூட வளர்ச்சி பெற்றிருந்த ஒரு தொழிற்சங்கமான "நைட்ஸ் ஒப் லேபர்" என்ற அமைப்பின் தலைமை மேதின இயக்கத்திற் கெதிரான நாச வேலைகளில் இறங்கியதும், தன்னுடன் இணைந்திருந்த தொழிற்சங்கங்களை வேலை நிறுத்தத்தில் ஈடுபட வேண்டாம் என்று ரகசியமாக அறிவுறுத்தி வந்ததும் அம்பலப்பட்டிருந்தது. இத்தகை நிலைமை அன்றும் கூட (சுமார் ஒரு நூற்றாண்டுக்கு முன்பு) சந்தர்ப்ப-வாத தலைமைகளும் காட்டிக் கொடுப்புகளும் இருந்தன என்பதையும் அத்தகைய நிலைமையை மீறியும் போராட்டம் வீறு கொண்டெழுந்ததையும் காணக்-கூடியதாகவுள்ளது. இத்தகைய தடைகளையும் மீறி தொழிலாளர்களின் போர்க்குணம் மேலோங்கி நின்றது. இது ஸ்தாபனப்படாத மற்றத் தொழிலாளர்களையும்

www.tamilarangam.net



பற்றிக் கொண்டது. அமெரிக்க தொழிலாள வர்க்கத்திற்கு ஒரு புதிய வாழ்வு அப்போது மலர்ந்து கொண்டிருந்தது.

இந்த வேலை நிறுத்தத்தின் மைய நகரமாக விளங்கியது சிக்காக்கோ நகரமாகும். இங்கு தான் வேலை நிறுத்த இயக்கம் மிகப் பரவலாக இருந்தது. அதே நேரத்தில் மற்ற பல நகரங்களிலும் வேலை நிறுத்தங்கள் நடைபெற்றன. சிக்காக்கோ நகரில் உணர்வயதிதை நசுக்க முயன்ற பொலிசுடன் ஏற்பட்ட மோதலில் பல தொழிலாளர்கள் தங்கள் உயிரை உரிமைக்காக துறந்தார்கள். இந்த வேலை நிறுத்தத்தின் குறிப்பிடத்தக்க அம்சம் என்னவென்றால் திரட்டப்படாத மற்றும் பயிற்சி பெறாத தொழிலாளர்களும் இப் போராட்டத்திற்கு ஆதரவாக இருந்தமைதான். ஒரு புரட்சிகரமான உணர்வு நாடு முழுவதும் நிலவியிருந்தது.

முதலாளித்துவ சரித்திர ஆசிரியர்கள் கூட இப் போராட்டத்தை சிகப்பு போர் என்றும், மூலதனத்தின் மீதான வெறுப்பு என்றும், அப் போராட்டத்தின் போது கீழ்மட்ட ஊழியர்களிடையே நிலவியிருந்த அற்புதமான உற்சாகத்தையும் குறிப்பிடுகின்றார்கள். மே முதல் தினத்தில் பங்கு கொண்ட தொழிலாளர்களில் பாதிப்பேர் வெற்றி கொண்டதாக சொல்லப்படுகிறது. மற்ற இடங்களிலும் 8 மணி நேர வேலைநாள் அடைய முடியாவிட்டாலும் ஏற்கனவே இருந்த வேலை நேரத்தில் கணிசமான அளவு குறைக்கப்பட்டது.

அத்தகைய பெருமைக்குரிய, தொழிலாளர்களின் விடியலுக்கான போராட்டத்திற்கு உத்வேகம்

www.tamilarangam.net



உருக்குலைந்துபோய மேதினம் இன்று அடைந்துள்ள நிலைமை மிகவும் கேலிக்குரியதும், கண்டனத்துக்குரியதாயும் உள்ளது. இன்று உலகெங்கிலுமுள்ள வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளாயினும் சரி, மூன்றாம் உலக நாடுகளாயினும் சரி "மேதினம்" என்பது வெறும் சம்பிரதாய பூர்வமான ஒரு சடங்காகவே மாற்றப்பட்டுக் கொண்டிருக்கிறது. வளர்ச்சியடைந்த ஐரோப்பிய நாடுகளில் முதலாளிகளினதும், அரசினதும் அவர்களின் நலன்களிலும் அக்கறையாயுள்ள போலி தொழிற்சங்கங்கள் இத் தினத்தை ஒரு கேளிக்கை தினமாகவே மாற்றிக் கொண்டுள்ளன. அல்லது சிறு சிறு சலுகைகளைக் கோரி ஒதுங்கிக் கொள்கின்றன. கேவலமான நிலைமை என்னவென்றால், யாருக்கெதிரான போராட்டமாக மேதினம் தொடங்கியதோ அவர்களே இதனை முன்னின்று நடத்துவதுதான். சுவிசில் சில கன்ரோன்களில் மேதினம் விடுமுறை தினமாக விடப்படுவதில்லை.

இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் நிலைமை வித்தியாசமாக உள்ளது. அங்கு மேதினம் விடுமுறை தினமாக அறிவிக்கப்படுகின்றதோடு, இலவச கலை, களியாட்ட நிகழ்ச்சிகள் போன்ற திசை திருப்பும் முயற்சிகளை அரசுகள் மேற்கொண்டு வருகின்றன. அரசுக்கு ஆதரவான தொழிற்சங்கங்களே மிகப் பெரிய ஊர்வலங்களை நடத்துகின்றன. தேவை ஏற்பட்டால் தொழிலாளர்களின் பொருளாதாரக் கோரிக்கைகளுக்காக போராடுகின்ற ஒரு சில "இடதுசாரி" தொழிற்சங்கங்களின் மேதின ஊர்வலங்களுக்கு தடை விதித்து விட்டு

www.tamilarangam.net



சாசுவாசமாக இருக்கின்றது எனக். அதே நேரத்தில் தொழிலாளர்களுக்காக இருப்பதாக சொல்லிக் கொள்ளும் பல்வேறு "இடதுசாரித்" தொழிற்சங்கங்களின் தனித்தனியான ஊர்வலங்களில் ஒரே இலட்சியங்கள் பொறித்த பதாகைகளை தாங்கிச் செல்வதைக் காணும் பொழுது, தொழி-லாளர்கள் பிளவுபட்டிருக்கின்றதோடு அவர்களின் போர்க் குணாம்சமற்ற தன்மையையும், வர்க்க ஐக்கியம் எந்தளவுக்கு உள்ளதென்பதையும் காணக் கூடியதாகவுள்ளது. இத்தகை நிலைமைகள் மேதினம் என்ற எழுச்சியூட்டக்கூடிய, தொழிலாளர்களின் விடியலுக்கான உத்வேகத்தை தரக்கூடிய தினம் தனது புரட்சிகர குணாம்சத்தை இழந்து வெளிறிப் போயுள்ளதையும், அதன் அர்த்தத்தை இழந்து சம்பிரதாய பூர்வமான சடங்காகிவிட்டதையுமே காணக் கூடியதாயுள்ளது. ஆயினும் ஒடுக்குமுறைக் கெதிரான போராட்டமுள்ள நாடுகளிலும், புரட்சிகர சூழல் உள்ள நாடுகளிலும் மேதினம் என்பது உத்வேகத்தையும், ஆன்மீக உந்துதலையும் கொடுக்கக்கூடிய தினமாகவே உள்ளது.

-ராகவன்-

• × • × •

## முக்கிய அறிவித்தல்

"மனிதம்" முகவரி மாற்றப்பட்டுள்ளதால் புதிய முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

'MANITHAM'
POST FACH-12
3000 BERN-11
SWITZERLAND

www.tamilarangam.net



நூல் அறிமுகம்!

வ.கீதா எஸ்.வி.ராஜதுரை

மாக்சியத்திலுள்ள பல்வேறு போக்குகளை டனும் ஆழமான பரிச்சயம் ஏற்படுத்திக் கொள்ள விரும்பும் ஒவ்வொருவரும் படிக்க வேண்டிய நூல். சமுதாய மாற்றத்துக்காய் - பல்வேறு பிரச்சினைகளையிட்டு ஆய்வு தேடல் நிலையில் உள்ளவர்களுக்கு பயன்படக் கூடியது. அல்தூசர்! பிரெஞ்சுக் கம்யூனிஸ்ட் கட்சி-யின் முக்கிய உறுப்பினர்களுள் ஒருவர். "மாக்சின் பொருட்டு" «மூலதனத்தைப் படித்தல்» "சுயவிமர்சனம் தொடர்பான கட்டுரைகள்" «லெனினும் தத்துவமும் - பிற கட்டுரைகள்» போன்றவற்றின் ஆசிரியர். இந் நூல்கள் எழுப்பும் கேள்விகள், விவாதங்கள் மாக்சியர் ஒவ்வொருவரும் எதிர்கொள்ள வேண்டியவை.

# அல்தூஸர்

## ஓர் அறிமுகம்

தொடர்புகட்கு :-

STEPHAN
POST FACH - 60, 5400 ENNETBADEN.

ஆய்வுகள் தேடல்களை மேற்கொள்ளக் கூடியதும், ஆரோக்கியமான விவாதங்களை தோற்றுவிக்கக் கூடியதுமான நூல்களையும் வெளியீடுகளையும் அறிமுகம் செய்து வைப்பதில் "மனிதம்" தனது பக்கங்களை திறந்துவைத்திருக்கிறது.

www.tamilarangam.net



• சென்ற இதழ் தொடர்ச்சி •

# இனவாதத்தின் தோற்றம்

போர்க்காலமாக இருந்த 1915ம் ஆண்டு பணவீக்கத்தினால் அத்தியாவசியப் பொருட்களின் விலை அதிகரித்தபோது கிராமங்களில் முஸ்லீம் மக்களுக்கு இருந்த வியாபார ஆதிக்கத்திற்கு எதிராக சிங்கள மக்கள் தூண்டப்பட்டனர். அத்துடன் கொழும்பு-கண்டியில் மேலோங்கியிருந்த முஸ்லீம்-பௌத்த விரோத உணர்வு முஸ்லீம்-சிங்கள இனக்கலவரமாக உருவாகத் துணை புரிந்தது.

19ம் நூற்றாண்டில் முதலாளித்துவ எழுச்சியுடன் வளர்ச்சியடையத் தொடங்கிய தொழிலாளர் வர்க்கத்தில் சிங்களவர், தமிழர் (இலங்கை, இந்திய), மலையாளிகள், முஸ்லீம்கள், மலாயர், பறங்கியர் என இன,மத வேறுபாடுகள் இல்லாமல் இருந்தனர். சிங்களவர், தமிழர், மலையாளிகள் இடத்தில் சாதிவேறுபாடுகள் இருந்தும் கூடிய வேலைநேரம், குறைந்த ஊதியம், கடுமையான உழைப்பு போன்ற பொதுவான உணர்வுகள் மேலோங்கியிருந்ததனால் ஒரே வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் என்ற உணர்வு தோன்ற ஏதுவாக இருந்தது. 1927ம் ஆண்டு இனவேறுபாடு இல்லாமல் 13,000 தொழிலாளர்கள் 3 கிழமையாக வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டதனால் துறைமுக வேலைகள் பாதிக்கப்பட்டன. இவர்களது வேலைகளைச் செய்ய இந்தியாவில் இருந்து கொண்டுவரப்பட்ட தொழிலாளர்களும் வேலைநிறுத்தத்திற்கு ஆதரவு காட்டும் முகமாய் வேலை செய்ய மறுத்தனர். அத்துடன் இவ் வேலைநிறுத்தக் காலத்தில் துறைமுகத்தில் தரித்து நின்ற "ஜேர்விஸ்பே" என்ற அவுஸ்ரேலியக் கப்பல் தொழிலாளர்களும் உயர்ந்த வேதனத்திற்குக் கூட வேலை செய்ய மறுத்து தங்கள் ஆதரவை வேலைநிறுத்தத்தில் ஈடுபடும் தொழிலாளர்களுக்கு வழங்கினர். உலகத்தில் உள்ள தொழிலாளர்கள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தேச, இன, மத, நிற வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டவர்கள் என்ற உணர்வை இச்சம்பவம் எடுத்துக் காட்டியது.

நாட்டின் ஏற்றுமதிப் பொருட்களின் விலை வீழ்ச்சியுற்றதனால் தேயிலை, இறப்பர் தோட்டங்கள் மூடப்பட்டதனால் கொழும்பில் பொருளாதார தொழிற்பாடுகள் மந்த நிலையடைந்ததனால், தனியார் துறைகள் அரச திணைக்களங்கள் என்பன வேலைநீக்கம், சம்பளக்குறைப்பு என்பவற்றை செய்தன. இக்காலத்தில் கொழும்பில் வேற்று இனத்தவர்கள் மீது இருந்த இனவிரோதம், கூடிய வேலைவாய்ப்பு பெற்று இருந்த மலையாளிகள் மீது கூர்மையடைய வழிவகுத்தது. அத்துடன் வேலையின்மை, சம்பளக்குறைப்பு போன்றவற்றால் பாதிக்கப்பட்ட மக்களை மலேரியா நோயும் தாக்கியது. இதனால் பலர் இறந்தனர். இன ஒற்றுமையை வலியுறுத்தி வந்த ஏ. ஈ. குணசிங்கா தனது தொழிற்சங்கம் வீழ்ச்சியடைந்ததற்குரிய காரணிகளை ஆய்வுக்குட்படுத்தாமலும், தொழிலாளர்களின் பொருளாதாரக் கஷ்டங்களுக்கான உண்மை நிலையை விளக்காமல் இனரீதியான விளக்கங்களைக் கொடுத்தார். கொழும்பு தொழிற்சாலைகளிலும், புகையிரதசேவை, துறைமுக பகுதிகளிலும் பெரும்பங்கை வகித்த மலையாளிகளுக்கு எதிராக சிங்களவரைத் தூண்டிவிடும் இனவாதத்தைப் பரப்பினார். [சிங்களத் தொழிலாளர்கள் படிக்கும் பத்திரிகைகள், வெளியீடுகள் இனவாதத்திற்கு முக்கிய இடம் கொடுத்து வெளியிடப்பட்டன]. மலையாளிகள் மீதான விரோத உணர்வு கூர்மையடைந்ததனால் 1940ம் ஆண்டு மலையாளிகளில் பெரும்பகுதியினர் இந்தியா செல்லவேண்டியேற்பட்டது. மலையாளிகளுக்கு ஆதரவாக சமசமாஜக் கட்சி செயற்பட்டது. மலையாளிகளுக்கு எதிரான இனவிரோதம் கூர்மையடைந்த காலங்களில் தமிழர்களை சிங்களவர்கள் மண்ணின் மைந்தர்களாக் கருதினர். [உ+ம்: தேநீர்க் கடைகளில் சிங்களவர்கள் தமிழர்கள் சாப்பிடும் கோப்பைகள் ஒன்றாகவும், மலையாளிகளுக்கு வேறாகவும் ஒதுக்கப்பட்டு வந்தது.]

www.tamilarangam.net



தோட்டத் தொழிலாளர்களின் தீவிரமான போராட்டங்களையடுத்து லங்கா சமசமாஜக் கட்சி தோட்டத் தொழிலாளர் சங்கத்தை உருவாக்கியதுடன் 1939-40 களில் தோட்டத் தொழிலாளர்களின் தீவிரமான வேலை நிறுத்தங்களையும் முன்நின்று வழிநடத்தியது. இது சிங்களப்பூர்ஷவாக்களுக்கு அச்சத்தையும் முதலாளிகளின் எதிர்ப்புணர்வு வளரவும் வழிவகுத்தது. இத்துடன் நேருவின் ஆதரவுடன் தொடங்கிய இலங்கை-இந்தியக் காங்கிரசும் தொழிற்சங்க நடவடிக்கைகளை ஆரம்பித்தது. சிங்களத் தலைவர்களிற்கு இந்தியாவின் தலையீடும் இம்மக்களூடாக நிகழலாம் என்று அச்சத்தை வளரவூட்டியது. 1947ம் ஆண்டு நிகழ்ந்த பொது வேலைநிறுத்தம், இரண்டாம் உலகப்போரின் இறுதியில் ஒலித்த சிவப்பு அரசியல் நெருக்கடி காலனித்துவ ஆட்சியாளரை இலங்கைக்கு சுதந்திரம் கொடுக்க வைத்ததுடன், சிங்களப் பூர்ஷவாக்களுக்கு எச்சரிக்கையைகொடுத்தது. 1947ம் ஆண்டு நடந்த தேர்தலில் தோட்டத் தொழிலாளர்கள் இலங்கை-இந்தியக்காங்கிரஸை 7 தொகுதிகளிலும் அது போட்டியிடாத தொகுதிகளில் தோட்டத்தொழிலாளர்கள் இடது சாரிகளை ஆதரித்ததன் மூலம் 14 இடது சார் அங்கத்தவர்களையும் பாராளுமன்றத்திற்கு அனுப்பினர். இடது சாரிகளின் அங்கத்துவம் 20 ஆக அமைந்து பிரதான எதிர்க்கட்சியானதும், இலங்கை-இந்தியக் காங்கிரசின் அங்கத்தவர்கள் பாராளுமன்றத்தில் எதிர்கட்சியுடன் இருந்ததோடு முக்கியமான விடயங்களில் இடதுசாரிகளுடன் சேர்ந்து வாக்களித்தனர். தோட்டத் தொழிலாளர் காங்கிரஸின் பாராளுமன்ற அங்கத்தவர்களினதும் இடதுசாரிகளின் கூட்டாலும் சிங்களப் பூர்ஷவாக்களுக்கு உண்டான அச்சமானது 1948ம் ஆண்டு சுதந்திரமடைந்தபின் அரசால் தோட்டத்தொழிலாளர்களின் வாக்குரிமை பறிக்கப் படுவதில் போய் முடிந்தது. தோட்டத் தொழிலாளரின் வாக்குரிமை பறிக்கப்பட்டபோது பாராளுமன்றத்தில் இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் அரசை ஆதரித்தும், இடதுசாரிக்கட்சிகள் எதிர்த்தும் வாக்களித்ததை உற்று நோக்குகையில், அவர்களின் வர்க்க ரீதியான சார்பை

www.tamilarangam.net



கவனிக்க முடியும். ஏகாதிபத்திய எதிர்ப்பும் தேசிய முதலாளித்துவச் சார்பும் கொண்ட பண்டாரநாயக்கா ஏகாதிபத்திய சார்பு முதலாளித்துவ U.N.P யில் இருந்து விலகி 1951ம் ஆண்டு யூன் மாதம் மக்கள் ஐக்கிய முன்னணி (சுதந்திரக் கட்சி) ஆரம்பித்தார். தேசிய முதலாளித்துவத்தில் அந்நியரின் ஆதிக்கத்திற்கு முடிவுகட்டவும், சிங்களத் தமிழ் தொழிலாளர்களின் கூட்டு நடவடிக்கை தீவிரமடைந்து வருவதை (1953ம் ஆண்டு 12ம் திகதி ஆகஸ்ட் மாதம் நடந்த 24 மணிநேர கர்த்தாலில் இனவேறுபாடுகள் இல்லாமல் நகர்ப்புற கிராமப்புற தொழிலாளர்கள் கலந்து கொண்டதுடன் 'ஒழுங்கை' நிலைநாட்ட வந்த பொலிசாரை எதிர்த்தனர்) இனரீதியாகப் பிளவு அடைய வைப்பதற்கும், தனது கட்சி ஆட்சியைக் கைப்பற்றுவதற்காகவும் பண்டாரநாயக்கா சிங்களம் மட்டும் அரசகரும மொழியாக்கிவேன் என்ற கோஷத்தை 1956ம் ஆண்டுத் தேர்தலில் முன்வைத்து அதிபெரும்பான்மை வோட்டுக்களைப் பெற்று சட்டமூலமாக்கினார். ஆங்கில வைத்தியம் அரச வைத்திய சேவையாக இருந்ததனால், ஆயுள் வேத வைத்தியர்களின் வைத்தியம் முதன்மை பெறாததாலும், நிர்வாக சேவைகள் அரசியலில் ஆங்கிலம் கற்றவர்களின் ஆதிக்கம் இருந்ததனாலும், சிங்களம் மூலம் கல்வி கற்ற ஆசிரியர்களுக்கும், புத்தமதத்தினருக்கும், சிங்களக் கலாச்சாரத்தின் 'பாதுகாவலர்'களான புத்த பிக்குகளுக்கும் சமூகத்தில் அந்தஸ்து குறைவாகக் காணப்பட்டது. இவர்களின் ஆதரவுடன் வேலையற்ற படித்த வாலிபர்களும், பொருளாதாரத்தில் நலிவுற்றவர்களும், சிங்களம் மட்டும் அரசகரும மொழியாக வருவதனால், தங்களுக்கும் விடிவு கிடைக்கும் என்று நம்பிக்கையில் பொது தேர்தலில் தங்களின் ஆதரவையும், மக்களின் ஆதரவையும் திரட்டி பண்டார நாயக்காவுக்கு வழங்கினர். இடதுசாரிக்கட்சிகளான கம்யூனிஸ்ட், சமசமாஜக் கட்சிகள் சம அந்தஸ்தை வலியுறுத்தி இம்மசோதாவை எதிர்த்தனர்.

இவ்வாறு பண்டார நாயக்காவால் கொண்டுவரப்பட்ட தனிச் சிங்களச்

www.tamilarangam.net




சட்டத்தை தொடர்ந்து தமிழர்களின் போராட்டங்களும், இனக்கலவரங்களும் ஆரம்பமாகின. இது 58,77,83ம் ஆண்டு என தொடர்ந்தது.

1950 களின் நடுப்பகுதியில் இருந்து அடுத்த 30 வருடங்களுக்கு சிங்களப் பௌத்தர்களின் போராட்டங்கள் 'சிங்களவர்களின் பாரம்பரிய பகைவர்' தமிழர்கள் என தமிழ்மக்களுக்கு எதிராகத் திரும்பியது. இக்கருத்து குட்டி பூர்ஷ்வாக்களின் கருத்தாக ஆரம்பிக்கப்பட்ட போதும் காலப்போக்கில் எல்லா வர்க்கத்தினரையும் இணைத்துக் கொண்டது.

இவ்வாறு காலனித்துவ ஆட்சியாளர்களால் வித்திடப்பட்ட இனவாதம் இன்று நாட்டை நிர்மூலமாக்கி கொண்டு இருக்கிறது. இதனை வெறும் பெரும்பான்மை-சிறுபான்மை இனங்களுக்கிடையேயான சண்டையாக குறுக்கிப் பார்க்காமல் இதன் உண்மையான காரணங்களை கண்டறிவதே சிறப்பானதாகும்.

[குமாரி ஜெயவர்த்தனாவின் "இலங்கையின் இனவர்க்க முரண்பாடுகள்" என்ற நூலை ஆதாரமாகக் கொண்டே இக்கட்டுரை எழுதப்பட்டது]

— M.மணி —




- "மனிதம்" விவாதப் பகுதியில் தொடர இருக்கும் கருத்துப் பரிமாற்றங்கள் ஒரு ஆரோக்கியமான வளர்ச்சிக்கு வித்திடும் என நம்புகிறோம்.

  ○ அருள், ZÜRICH.

- நூல் வெளியீட்டு விழா விமர்சனம் மனிதத்தின் ஐந்து பக்கத்தினை விழுங்கியிருந்தது. இதில் புதிய படைப்புகள் போன்ற வாசகர்களுக்கு தேவையானவற்றைப் பிரசுரித்திருந்தால் வாசகர்கள் பயன் அடைந்திருப்பார்கள். ... தமிழ்க் கலாச்சார உடையில் வந்த என் போன்ற பெண்களுக்கு ஆயிரம் ஊசிகள் ஒரே நேரத்தில் குத்துவதைப்போன்றே இருந்தது.

  ○ திருமதி ஈஷா ஜோதி, BASEL.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பாரதன வாழ்விலிருந்து..... (3)

சென்ற இதழில் காந்தனும் மகேசனும் மீண்டும் சந்தித்துக் கொண்டனர். இச்சந்திப்பில் அடிமைகள் சமுதாயம் எப்படியிருந்தது என்பதைப் புரியவைப்பதற்கு ரோம் நகரில் இற்றைக்கு 2000 வருடங்களுக்கு முன்னர் நிலவிய அடிமைகள் சமுதாயத்தில் ஸ்பட்டகஸ் என்பவனின் தலைமையில் நடைபெற்ற கலகங்களின் வரலாற்றை மகேசன் காந்தனுக்கு கூறினான். இதனடிப்படையில் காந்தனிடமிருந்து கேள்விகளை எதிர்பார்த்தபடி மகேசன் இருந்தான் என்றும் பார்த்தோம். இவ்விதழில் தொடர்ந்து காந்தனின் கேள்விகளுக்கான மகேசனின் பதில்களைப் பார்ப்போம்.

காந்தன்: அடிமைகள் என்ற சமுதாய அமைப்புமுறை ஏன் ஏற்பட்டது என்பதை விரிவாகக் கூறுவாயா?

மகேசன்: பண்டைய சமுதாயத்தில் மக்கள் குலங்கள் அல்லது கணங்கள் என்ற அடிப்படைகளில் கூட்டம் கூட்டமாக வாழ்ந்தார்கள் என்று முன்பு கூறியிருந்தேன். பண்டைய சமுதாயத்தின் இறுதிக்காலகட்டங்களில் மந்தைகளை வளர்ப்பது, விவசாயம் செய்வது, வீட்டில் செய்யும் கைத்தொழில்கள் ஆகிய எல்லாத் துறைகளிலும் உற்பத்தி பெருகியது. இதனால் மனிதனின் உழைப்பால் தனது உயிர்வாழ்வதற்கான தேவையைவிட அதிக அளவில் உற்பத்தி செய்ய முடிந்தது. அதேசமயத்தில் கணங்கள் அல்லது குலங்களின் ஒவ்வோர் அங்கத்தவர்களின் வேலையின் அளவு அதிகமாகிக் கொண்டு வந்தது. சமுதாயத்தில் அதிகமான உழைப்பு சக்தி தேவைப்பட்டதாகிவிட்டது. அதாவது துணி நெசவு, உலோகச்சாமான்கள் செய்வது மற்றும் தனித்

www.tamilarangam.net



தன்மை பெற்று வந்த இதர தொழில்களிலும் செய்பொருட்களைப் படைப்பதிலும் மேலும் மேலும் தரவேறுபாட்டையும் கலைச்சிறப்புமிலா வேலைப்பாட்டையும் வெளிப்படுத்தினர். விவசாயத்தில் கூட தானியங்களையும், அவரைவகையைச் சேர்ந்த பயிர்வகைகளையும், பழங்களையும் உற்பத்தி செய்ய அறிவு வளர்ச்சி பெற்றதோடல்லாமல் எண்ணையையும், வைனும் பெற்றுக் கொள்வது பற்றியும் அறிந்து கொண்டனர். இதனால் தான் இன்மேல் இந்தப் பல்வேறு வேலைகளை தனிமனிதன் செய்வது என்பது சாத்தியமற்றதாகிவிட்டது. சமுதாயத்தில் வேலைப்பிரிவினை ஏற்பட்டது. அதாவது; விவசாயத்தில் இருந்து கைத்தொழில் பிரிந்துபோனது உற்பத்திப் பெருக்கத்தை தொடர்ந்து உழைப்பின் உற்பத்தித்திறனும் அதிகமானதால் மனித உழைப்புச் சக்தியின் மதிப்பு உயர்ந்தது. ஆரம்பத்தில் இங்கும் அங்கும் நிலவி வந்த அடிமைமுறை இப்போது சமுதாய அமைப்பின் ஒரு முக்கியமான பகுதியாகிவிட்டது. அடிமைகள் வெறும் உதவியாளர்களாக இருந்தது போய் வயல்களிலும் தொழில்கூடங்களிலும் வேலை செய்வதற்கு கூட்டங்கூட்டமாக நிர்ப்பந்தமாக அனுப்பப்பட்டார்கள். இப்படியாகத்தான் அடிமைகள் சமுதாய அமைப்புமுறை மனிதசமுதாய வளர்ச்சியின் போக்கில் ஏற்பட்டது. இதற்குத் தேவையான உழைப்புச் சக்தியை யுத்தங்களில் கைது செய்யப்படுபவர்களைக் கொண்டு ஆரம்பத்தில் நிறைவேற்றினார்கள்.

தாந்தன்: புராதன காலத்தில் தாய்வழிச் சமூகமாக இருந்த சமூகம் எப்படி தந்தையாதிக்க சமுதாயமாக மாறியது.

மகேசன்: புராதனசமுதாயத்தின் இறுதிக்காலத்தில் ஆண்களுக்கும், பெண்களுக்கும் உழைப்பில் பிரிவினை ஏற்பட்டது என்பதை முன்னர் கூறியிருந்தேன் அதாவது பெண்கள்- பிள்ளைகள், முதியோர் பராமரிப்பு, உணவுதயாரிப்பு, வீட்டுவேலைகள், சிறு விவசாய உற்பத்தி போன்றவற்றில் ஈடுபட ஆண்கள் வேட்டைக்குச் சென்றனர். அப்போதும் ஆண்களும் பெண்

www.tamilarangam.net



களும் தந்தமது துறைகளில் தனித்துவமாகத்தான் இருந்தனர். ஆனாலும் உயிர்வாழ்வதற்கு அவசியமான பௌதீக செல்வங்களை உற்பத்தி செய்வதே ஆணின் வேலையாக அமைந்ததால், பௌதீக செல்வங்களை உற்பத்தி செய்வதற்கான சாதனங்களையும் அவனே உற்பத்தி செய்தான். அச்சாதனங்களும் அவனுடைய சொத்தாகத்தான் இருந்தது. கால்நடைகளும் அவனுக்கே சொந்தமாக இருந்தது. பின்னாளில் இவற்றின் பரிவர்த்தனையில் பெற்ற பொருட்களும் அடிமைகளும் அவனுக்கே சொந்தமாயிற்று. உற்பத்தியில் இப்போது கிடைத்த மிச்சம் அதாவது உபரி எல்லாம் ஆணுக்குரியதாயிற்று. அதை அனுபவிப்பதில் தான் பெண் பங்கு கொண்டாள். அதன் உடைமையில் அவளுக்குப் பங்கில்லை. வீட்டு வேலைகளில் பெண் செய்த தனித்துவமான நிலையின் காரணமாக, முன்னர் பெண் தலைமை வகித்தாள். ஆனால் இப்போது உயிர் வாழ்வதற்கு அடிப்படையான செல்வங்களை உற்பத்தி செய்ய ஆண் செய்த வேலையோடு ஒப்பிடும்போது பெண் செய்த வீட்டுவேலை அதன் முக்கியத்துவத்தை இழந்துவிட்டது. சமுதாயத்தில் தனிச்சொத்துரிமையின் உருவாக்கமும் மற்றப் பொருட்களைப்போலவே பெண்ணும் ஆணுக்குச் சொந்தம் என்ற உரிமையை வேண்டி நின்றது. இது அவ்வளவு எளிதில் சாதிக்கப்பட்டதல்ல, பெண்வழியாக வம்சாவழியைக் கணக்கிடுவதும், வாரிசு உரிமையைத் தேர்ந்தெடுப்பதும் தூக்கியெறியப்பட்டது. ஆண்வழி வம்சாமுறையும் வாரிசுமுறையும் அமைக்கப்பட்டது. நாகரீக மக்களிடம் இந்தப்புரட்சி எப்போது சாதிக்கப்பட்டது என்பதை சரியாக கணக்கிட முடியாது. இது முழுவதும் ஏடறியாத வரலாற்று காலத்தின் நிகழ்வாகும். ஆனால் இது உண்மையில் சாதிக்கப்பட்டது என்பதை பகோபன் என்பவர் நிரூபித்துள்ளார்.

தாயுரிமை தூக்கியெறியப்பட்டது என்பது பெண்ணினம் உலகவரலாற்று ரீதியில் பெற்ற தோல்வியாகும். வீட்டிலும் தந்தையாதிக்கம் ஏற்பட்டதுடன் பெண் இழிநிலைக்குத் தள்ளப்பட்டாள். வேலைக்காரியாக ஆக்கப்பட்டாள். ஆணின் காம இச்சைக்கு அடிமையாக்கப்பட்டாள். பெண்களின்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இந்த இந்நிலை ஸ்பாட்டக்கஸ் காலத்திய ரோமாபுரியில் நிலவியது. இன்றுள்ளதுபோல் தந்தையாதிக்கம் பெற்ற தனிக்குடும்பமாக அன்று நிலவவில்லை. ஒரு இடைநிலைக்குடும்பமாக ஒரு வழுப்பெற்ற ஆணின் ஆதிக்கத்தின் கீழ் மனைவிகள், குழந்தைகள், அடிமைகள் அவர்களின் மனைவியர் என்று சுதந்திரமானவர்களையும் சுதந்திரமற்றவர்களையும் திரட்டிய பலதார மணமுடைய இடைநிலைக்குடும்பவடிவமாக இருந்து பரிணாம வளர்ச்சியூடாக இன்றைய நேரடி தந்தையாதிக்க (ஆண்) குடும்ப முறைக்கு மாற்றமடைந்தது.

காந்தன் : அடிமைகள் சமுதாயம் ஏன் தொடர்ந்து நிலைபெறமுடியாமல் போனது? அதற்கான காரணம் என்ன?

மகேசன் : அடிமைகள் சமுதாயத்தில் தான் எஜமான்னர்களின் ஆதிக்கம் ஏற்பட்டதுடன், வன்முறைக் கருவியான அரசு என்ற சட்டம் சார்ந்த வடிவமும் தோற்றம் பெற்றது. அநேக அரசுகள் சிற்றரசாக இருந்தன. ரோமாபுரி சாம்ராஜ்யத்தைப் போல பேரரசுகள் நிலவிய போதும் மையப்படுத்தப்பட்ட அரசுவடிவத்தின் மூலம் நேரடி ஆட்சி செலுத்துவது கடினமாக இருந்தது. அடிமை சமுதாயத்தில் முடியாட்சி, குடியாட்சி முதலிய பலவகைப்பட்ட அரசவடிவங்கள் இருந்தன. ஆனால் இவை எல்லாமே எசமானர்களின் ஆதிக்கக் கருவிகளாகவே செயலாற்றின. அடிமைகள், சமுதாயத்தின் அங்கத்தினராகக் கருதப்படவில்லை. மறுபுறத்தில் சமுதாயத்தில் சுதந்திரமாய் இருந்த சமூக உறுப்பினர்கள் (அடிமைகள் இல்லாதவர்கள்) மத்தியிலும் வர்க்க வேறுபாடுகள் வளர்ந்தன. விவசாயிகள், கைத்தொழிலாளர்கள் ஒருபுறமும் அவர்களைச் சுரண்டிவாழும் ஆளும் கூட்டமும், வியாபாரிகளின் தோற்றமும், வட்டிக்கடைக்காரர்களின் தோற்றமும், அவர்களின் செல்வாக்கும் ஏற்பட்டது. அடிமைகளின் எசமானர்கள் தமது செல்வங்களை அதிகரிக்க உற்பத்திமுறைகளை அபிவிருத்தி செய்வதில் கவனம் கொள்ளவில்லை, புதிய பிரதேசங்களைக் கைப்பற்றுவதிலும் வரிவருமானத்திலும்,

www.tamilarangam.net



அடிமைகளைப் பெருக்குவதிலுமே கருத்தாக இருந்தனர். இவ்வாறு நன்மையடைந்தோர் அடிமை உடைமைக்காரர்களும் அதிகாரிகளுமே. இவர்கள் மக்கள் தொகையின் சிறு பகுதியினர். ரோமாபுரியில் சுதந்திரமான விவசாயிகளுக்கும் கைத்தொழிலாளர்களுக்கும் ரோமானியப் படைகளின் வெற்றியால் ஆதாயம் எதுவும் கிடைக்கவில்லை. கட்டாய ராணுவ சேவை, நிலங்கள் பறிமுதல் போன்ற கொடுமைகளை நிகழ்ந்தன. எசமானர்களின் சாட்டைக்கு அஞ்சி வேண்டா வெறுப்பாக உழைக்கும் அடிமைகளையே நம்பி நின்றது ரோமானிய ஆட்சி. இயல்பாகவே வணிப மூலதனம் பெருகிய போதும் கைத்தொழில்கள் அதற்கேற்றளவில் முன்னேற்றம் அடையவில்லை. இதனால் அடிமைகள் சமுதாயத்தில் தொடர்ந்து போர்களும் கலகங்களும் தொடர்ந்தன. ஏழை-பணக்காரன், சுரண்டுபவன்-சுரண்டப்படுபவன், உரிமைகள் அனைத்தும் படைத்த எசமான்- உரிமைகள் எதுவும் அற்ற அடிமைகள் இவர்களிடையே நடக்கிற உக்கிரமான வர்க்கப் போராட்டம் - இதுவே அடிமைச் சமுதாய அமைப்பில் நிலவியது. இதனால் அடிமைகள் சமுதாய அமைப்புமுறை நிலவிய ரோமாபுரி, கிரேக்க அரசுகள் ஆட்டம் கண்டன.

ரோமானியப் பேரரசின் இறுதிக்காலத்தில் அடிமைமுறை ஆதாயம் இல்லாத காரணத்தால் அடிமைகளைக்கொண்டு நடத்தப்பட்ட பெரும் பண்ணைகள் சிறு, சிறு துண்டுகளாகப் பிரிக்கப்பட்டு கொலன் (colony) என்பவர்களிடம் விநியோகிக்கப்பட்டது. அவர்கள் ஆண்டுதோறும் அரசுகளுக்கு குறிப்பிட்ட வரி செலுத்தினார்கள். இவ்வாறு பண்ணை அடிமை முறையும் விவசாய முறைக்கு மாறிக் கொண்டிருந்த ரோமாபுரி பேரரசு, திறமைமிக்க படையமைப்புக்களை கொண்டிருந்த ஜேர்மானியக் குடிகளின் தாக்குதல்களுக்குள்ளாக்கப்பட்டு . . இறுதியில் அழிந்தொழிந்து போனது.

காந்தன்: இந்த அடிமைகள் அமைப்புமுறை ஆசியாவில் இல்லையா மகேசன்!


(இதற்கான மகேசனின் பதில்களை அடுத்த இதழில் பார்ப்போம்)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# நிக்கராகுவா




அமைதியான ஆக்கிரமிப்பா?

வெற்றிகரமான தோல்விய

ஏகாதிபத்திய நோக்கம் கொண்ட வல்லரசு நாடுகள், உலகிலுள்ள 3ம் உலக நாடுகளை தமது ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவர போட்டா போட்டியிடுகின்றன. அல்லது தமக்கு சார்பான அரசுகளை ஏற்படுத்தி தங்களின் நவீன சுரண்டலுக்கு இந்தகம் ஏற்படாமலாவது பார்த்துக் கொள்கின்றன. குறிப்பாக அவற்றின் அருகாமையில் அமைந்துள்ள சிறிய நாடுகளை தமது ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவருவதில் முழுமூச்சுடன் செயற்பட்டுவருகின்றன. இச் சின்னஞ்சிறிய நாடுகளில் பெரிய அளவில் சுரண்டல் ஆதாயம் இல்லாவிடினும் தமது தேசத்தின் பாதுகாப்பு கருதி இதனை மேற்கொள்வதாக கூறிக் கொள்கின்றன. இந்த ஏகாதிபத்தியத்தின் ஆளும் வர்க்கங்கள் சிறிய நாடுகள் தமது தனித்துவத்தை, இறைமையை பேணிக்கொள்வதை தமது 'கௌரவத்துக்கு' விடப்பட்ட சவாலாக ஏற்று

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அந்த நாடுகள் சீர்குலைப்பதில் மிகவும் அக்கறையுடன் உள்ளன. இந்த வகையில் மத்திய, லத்தீன் அமெரிக்காவில், தனது ஆதிக்கத்தை நிலைநாட்ட அமெரிக்க ஏகாதிபத்தியம் அந்நாடுகளில் தனக்குச் சார்பான ஆட்சியை ஏற்படுத்த முடியாத பட்சத்தில் நேரடி இராணுவத் தலையீடு செய்ய தன்னலமான இழி செயல்களில் இறங்குகிறது. 1979 ல் நிக்கராகுவா என்ற சிறிய நாட்டில் ஏற்பட்ட புரட்சியில் அமெரிக்க அடிவருடி சோமோசாவின் ஆட்சி தூக்கி எறியப்பட்டு சன்டினிஸ்டாக்களின் தலைமையிலான புரட்சிகர அரசாங்கம் அமைக்கப்பட்டது. இவ்வரசை கவிழ்ப்பதற்காக கடந்த பத்து வருடங்களாக பொருளாதாரத் தடைகளை விதித்தும், கொன்ரா எதிர்ப்புரட்சிக் கும்பலுக்கு ஆயுதப்பயிற்சி அளித்தும், நேரடியான உதவிகளை வழங்கியும், பல்வேறு நெருக்கடிகளையும் கொடுத்துவந்தது. இதன் விளைபலனை அறுவடை செய்வதற்காக ஜனநாயகத்தை காக்கிறோம் என்ற பெயரில் புதிய யுக்திகளை கையாளத் தொடங்கியுள்ளது. இவற்றை முறியடிக்க, புரட்சிகர அரசு மக்கள் மத்தியிலுள்ள செல்வாக்கை மீண்டும் நிலைநாட்ட வேண்டிய தேவை எழுந்தது.

இந்த அடிப்படையில்தான் கடந்த பெப்ரவரிமாதம் நிக்கராகுவாவில் நடைபெற்ற தேர்தலையும் நோக்க வேண்டும். சான்டினிஸ்டாக்கள் 41% வாக்குகளைப் பெற்று தோல்வியுற்றதும், இவர்களை எதிர்த்து தேர்தலில் பங்கு பற்றிய பதினாறு கட்சிகளினதும்,

www.tamilarangam.net



இயக்கங்களினதும் கூட்டமைப்பான U.N.O 54% வாக்குகளைப் பெற்று வெற்றிபெற்றதும், சண்டினிஸ்டாக்களை மட்டுமன்றி, உலகிலுள்ள முற்போக்கு, ஜனநாயக சக்-திகளையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

1979 ஆண்டு யூலை 19ல் FSLN தலைமையில் புரட்சிகர அரசு நிறுவப்பட்ட காலந்-தொட்டு, இன்றுவரை சண்டினிஸ்டாக்கள் குறிப்பிட்ட-ளவில் பலதை சாதித்துள்ளனர். சிறந்த மருத்துவ சேவை, முதியோர், இளையவர் கல்வித் தராதரத்தில் உயர்வு, நிலச் சீர்திருத்தம், பெண்களின் சுயாதீனமான அமைப்புகளின் செயல்பாடுகளுடன், தொழிலில் சமவாய்ப்புகள் போன்ற வற்றுடன், கொன்ராஸ் எனும் எதிர்ப்புரட்சிக் கும்ப-லின் தாக்குதல்களிற்கும் முகம் கொடுத்தும் வந்துள்ளனர். நிக்கரகுவாவின் மூலவளங்களையும், அபிவிருத்தித் திட்டங்-களையும், கொன்ராஸ் எதிர்ப்புரட்சிக் கும்பல் திட்டமிட்டே அழித்து வந்துள்ளது. 1981 ல் இருந்து 1984 வரை கொன்ராஸ் கூலிப்படைகளுக்கு 80 மில்லியன் டொலரை அமெரிக்கா வழங்கி வந்துள்ளது. அது மட்டுமல்லாமல் 1983 ல் 90% சர்க்கரை இறக்குமதியை ரத்து செய்துள்ளது.

இதன் தொடர்ச்சியாக நிக்கரகுவாவின் உள்விவகாரங்களில் தலையிட்டு, சாண்டினிஸ்டாக்களுக்கு எதிராக தேர்தலில் போட்டியிடும் சக்திகளுக்கு பண உதவிகளை வழங்கியதோடு, பொய்யான வாக்குறுதி-களையும் கொடுத்து எதிர்க் கட்சிகளின் கூட்டணியை வெற்றி பெறச் செய்துள்ளது. இத்துடன் அமெரிக்க

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஜனாதிபதி ஜோர்ச் புஸ் நிக்கராகுவாவின் அபிவிருத்தித் திட்டங்களிற்கும் 'ஜனநாயக மயமாக்கலிற்கும்' முன்னூறு மில்லியன் டொலரை இவ்வருடம் உடன் உதவியாக வழங்குவதாக உறுதியளித்துள்ளார். இவ் வகையான பொய்யான வாக்குறுதிகளை ஏனைய இலத்-தீன் அமெரிக்க நாடுகளுக்கும் வழங்கியது தெரிந்ததே. ஆயினும் பொம்மை அரசுகளில் மக்களுக்கு நம்பிக்கை ஊட்டுவதற்காக இவ்வாறான நிறைவேற்றியும் உள்ளது. மறுபக்கத்தில் தமக்கு எதிரான சக்திகளை நிலைகுலைய வைப்பதற்கு பல மில்லியன் டொலர்களை இரகசியமாக செலவிட்டும் வருகின்றது. இது போன்றே பனாமாவிற்கு 500 மில்லியன் டொலர்களை வழங்கப் போவதாகவும் அறிவித்துள்ளது.

ஏப்ரல் 25 ம் திகதி வியோலெட்டா-சமாரோல் எனும் பெண்மணி தலைமையில் எதிர் கட்சிகளின் கூட்டணி [U.N.O] தனது ஆட்சிப் பொறுப்பை ஏற்றுள்ளது. சான்டினிஸ்ராக்களும், எதிர் கட்சிகளின் கூட்டணியிடம் [U.N.O] ஆட்சிப் பொறுப்பை கொடுப்பதற்கு முன்னர், சில நிபந்தனைகளையும், கோரிக்கைகளையும் விதித்திருந்தனர். இதனடிப்படையில் இரு சாராரும் ஒரு சில விடயங்களில் விட்டுக் கொடுத்து உடன்பாட்டிற்கு வந்துள்ளனர். இதில் முக்கியமாக கொன்ரா எதிர் புரட்சிக் கும்பல் அவர்களின் ஆயுதத்தை கீழே போட வேண்டும் என்றும், இதனை ஏப்ரல் 25 ம் திகதிக்கு முன்னர் செய்ய வேண்டும் எனவும் நிபந்தனை விதித்திருந்தனர். இவ்

www.tamilarangam.net



நிபந்தனை நிறைவேற்றம், சில நடைமுறைச் சிக்கல் காரணமாக யூன் திகதிவரை பின்போடப்பட்டுள்ளது. ஆயினும், ஆயுத ஒப்படைப்புகள் தற்போது பகுதி பகுதியாக நடைபெற ஆரம்பித்துள்ளது. ஐக்கிய நாடுகள் சபையின் துருப்புகள் ஆயுதங்களை 'செயலிழக்க' செய்து வருகின்றனர்.

சான்டினிஸ்டாக்களின் இராணுவம் தொடர்ந் அரசியல் இராணுவமாக செயற்படுமா? அல்லது கலைக் கப்படுமா? என்பன போன்ற விபரங்கள் தெளிவாக மேலும் கிடைக்கவில்லை. கிடைத்த விபரங்களின்படி டானியல் ஒட்டேகாவின் சகோதரர் கம்பெர்ரே இராணுவத்தின் உயரதிகாரியாக இருப்பார் எனவும், மேலும்; இவ்வாறு இராணுவத்தில் உயர் பொறுப்புகளில் அங்கம் வகிப்பவர் எந்தவொரு கட்சியிலும் உயர் அங்கம் வகிக்க முடியாது என வெற்றி பெற்ற U.N.O கூட்டமைப்பு கேட்டதற்கிணங்க, கம்பெர்ரே (Humbeto) கட்சியின் உயர் பதவியிலிருந்து விலகி தொடர்ந்தும் கட்சியில் அங்கத்தவராகவுள்ளார். ஆயினும் U.N.O கூட்டரசு தொழில் ரீதியான இராணுவத்தினையே வைத்திருக்க விரும்புகின்றது. மேலும் இராணுவத்திற்கு சேர்க்கப்படும் வயதெல்லையும் கூட்டப் போவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆயினும் U.N.O கூட்டணி பாரிய மாற்றங்களை செய்வதற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் தேவையாகும். 41% வாக்குகளை பெற்ற பலம் வாய்ந்த எதிர்க்கட்சியாக சன்டினிஸ்டாக்கள் இருப்பதால் பாரிய மாற்றங்களை மேற்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கொள்வது கடினமானது. மேலும் U.N.O கூட்டரசில் அங்கம் வகிக்கும் பதினாறு கட்சிகளுக்கோ இதக் களிற்கோ மக்கள் அமைப்பின் பலமோ தொழிற் சங்கங்களின் பலமோ பாரிய அளவில் இல்லை. ஆனால் நிக்கிராக்குவாவின் பொருளாதாரத்தை சீர் குலைப் பதற்காக உருவாக்கப்பட்ட தனியார் முதலாளிய அமைப்பான Cosep உம், ஒரு தொழிற்சங்கமும், இவர் களிற்கு பக்கபலமாக உள்ளனர். ஆனால் சன்டினிஸ் டுக்களின், தலைமையின் கீழ், பலம் வாய்ந்த மக்கள் அமைப்புகளும் தொழிற்சங்கங்களும் உள்ளன. இவர்களை கொண்டு போராட்டத்தை தொடுப்ப தற்கான சக்தி இவர்களிடமேயுள்ளது.

ஆயினும் U.N.O கூட்டமைப்பில் பழைய சர்வாதிகாரி சோமோசாவின் அடிவருடிகளில் சிலரும் ஆயுதம் தாங்கியுள்ளனர். இது ஏனைய இலத்தீன் அமெரிக்க அரசுகளான எல்சல்வடோர், கௌதமாலா, கொலம்பியா போன்ற நாடுகளின் ஆட்சியிலிருக்கும் கட்சிகள் தமக்கெதிரான சக்திகளை அழித்தொழிப் பதற்கு கொலைகாரப் படைகளை வைத்துள்ளது. நிக்கிராக்குவாவிலும் இந் நிலைமை தோன்றக் கூடிய வாய்ப்புகள் உள்ளன.

தேர்தலில் சன்டினிஸ்ட புரட்சியாளர் களின் தோல்வி குறித்து பல்வேறு சக்திகளும் வெகு- சனத் தொடர்பு சாதனங்களும் பல்வேறு அபிப்பிராயங் களையும், கருத்துக்களையும், விமர்சனங்களையும் முன் வைத்துள்ளனர். ஆயினும் சன்டினிஸ்டாக்களின் அரசு

www.tamilarangam.net



ஒரு புரட்சிகரமான தேசிய அரசே. அவர்கள் கடைப்பிடித்துவந்த கொள்கை கலப்புப் பொருளாதாரக் கொள்கையே. இந்த நிலைமையிலேயே வெளிநாட்டு மூலதனங்களையும், முதலீடுகளையும் அங்கீகரித்திருந்தார்கள். அரசில் கிறிஸ்தவ பாதிரிமார்கள் தொடக்கம், தேசிய பூர்சுவாக்களும் அங்கம் வகித்தனர். புரட்சிக்கு பின் நாடு அடைந்திருந்த மிக மோசமான சீர்குலைவுகளை ஈடுகட்ட வேண்டிய தேவையும், இராணுவ ரீதியான பலத்தை பெருக்க வேண்டிய தேவையும் அவர்களுக்கு இருந்தது. நிக்கரகுவாவின் ஸ்தூலமான நிலைமைகளில் வைத்தே அவர்களின் "தோல்வியையும் கணிப்பிட வேண்டும். சோசலிச நாடுகள் என்றழைத்துக் கொள்ளும் நாடுகளில் அரசும், கட்சியும் சர்வாதிகார ஆட்சியை மேற்கொள்வதுடன், மக்களின் நம்பிக்கை இழந்து; மக்களின் அபிப்பிராயங்களை பெற மறுக்கும் இன்றைய நிலைமைகளில் சண்டினிஸ்டாக்கள் மக்கள் மேல் கொண்ட நம்பிக்கையில் இரண்டாவது தடவையும் தேர்தலை துணிந்து சந்தித்ததும், தேர்தலில் தனித்து 41%. வாக்குகளைப் பெற்றதும் வெற்றிகரமான தோல்வியேயாகும்.

நிக்கரகுவா மக்களை சர்வதேச பத்திரிகையாளர்கள் பேட்டி கண்ட போது "நாங்கள் சண்டினிஸ்டாக்களுக்கு எதிராக வாக்களிக்கவில்லை. யுத்தத்திற்கெதிராகவே வாக்களித்தோம்" என்று கூறப்பட்டமையும், தமது தோல்வியைப்பற்றி டானியல் ஒட்டேகா குறிப்பிடுகையில் "அரச அதிகாரத்தை வெகுமதியாகக்

www.tamilarangam.net



கொடுத்து யுத்தத்தை நிறுத்தியிருக்கிறோம்" என்று குறிப்பிடப்பட்டமையும் கவனிக்கப்பட வேண்டிய அம்சங்கள்.

இத்தகைய நிலைமைகளைப் பார்க்கும் போது புரட்சியை எடுத்துச் செல்வதற்கான ஆற்றலும், பலமும் சண்டினிஸ்ரூக்களிடம் இருப்பது தெரியவருகிறது. சண்டினிஸ்ரூக்கள் தமது தவறுகளைப் படிப்பினையாகக் கொண்டு, அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் புறநில நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்து உறுதியாக முன்னேறுவார்களா?

-ம.நரேந்திரன்.

-0-

## மனிதம் வீடியோ-5 ?

எமது நாட்டிலும் பிற நாடுகளிலும் நிகழும் செய்திகளை இயன்றவரை தொகுத்து வீடியோ கசட்டுகளில் ஒரு பத்திரிகை வடிவில் இதுவரை 4 இதழ்களை கொண்டு வந்தோம். மனிதம் வீடியோ பத்திரிகையை தொடர்ந்து வெளியிடுவதற்கு இருந்துவரும் நெருக்கடிகளையும் இது சார்பாக நண்பர்களின் கருத்துக்களையும் இதழ் 4-இல் கோரியிருந்தோம். எமது இந்த முயற்சி செய்திகளை கருத்துக்களை கொண்டு செல்வதற்கான எளிமையான வடிவமாக இருக்கிறது. ஆயினும் நடைமுறை வேலைப்பளுவாலும் காட்சிப் பற்றாக்குறை காரணமாகவும், எமக்கு கிடைக்கும் ஒத்துழைப்பு போதாமையாலும் 'மனிதம்' வீடியோ பத்திரிகையின் வெளியீடு இடை நிறுத்தப்படுகிறது என்பதை அறியத்தருகிறோம்.

• மனிதம் வீடியோ குழு

www.tamilarangam.net



மதம்:

# புதிய குழப்பங்கள்

(3)

"தனித்து சாது செல்லப்பா போன்றோரை மையப்படுத்தாமல், பொதுமைப்படுத்திப் பேசுவதே நல்லது" என்று சில வாசகர்கள் வற்புறுத்தியுள்ளனர்.

இக்கருத்தினைக் கவனத்தில் கொண்டு தனித்து "சாது செல்லப்பாவின் பித்தலாட்டக் கருத்துக்கள்" மீதான வாதப் பிரதிவாதமாக அமைவதை இயன்றவரை தவிர்த்துள்ளேன்.

"சாது செல்லப்பாவும், ஜெனியும் உங்களுக்கு வேப்பங்காயாக இருக்கிறது. கிருபானந்தவாரியார் உங்களுக்கு பஞ்சாமிர்தமா?" என்று அன்னார் வாசகர் கேட்டுள்ளார்.

ஒருவர் நாத்திகனாக இருப்பதும், தாம் விரும்பிய மதத்தைச் சார்ந்திருப்பதும் மதம் சாராதிருப்பதும் ஆகிய அனைத்தும் தனிமனித சுதந்திரத்திற்குட்பட்ட விடயம் என்பது முதலாவதுகட்டுரையில் தெளிவாக குறிப்பிட்டிருந்தேன்.

ஏற்கனவே ஆன்மீகத்துறையில் நம்பிக்கை கொண்டு, பேய், பிசாசு, மந்திரம், மாயம் என்று பலவித மூடநம்பிக்கைகட்பட்டிருக்கிறது எமது சமூகம். உலகின் வளர்ச்சியடைந்த மனித சமூகத்துடன் ஒப்பிடும்போது, மொழியியல் பொருளியல் உட்பட அறிவுவளர்ச்சியிலும் பலவருடங்கள் பின்நிற்கின்றோம் நாம்.

இந்நிலையில் இன்றைய உலகின் நிகழ்வுகள் ஒவ்வொன்றிற்கும் 'பைபிளில்' ஆதாரம் உண்டு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



என்று கூறிக்கொண்டு விஞ்ஞான ரீதியான வரலாற்றுண்மைகளைத் திரித்து பலவித மூடக் கொள்கைகளைத் திணித்து இளந்தலைமுறையின் சிந்தனைப் போக்கினை முடக்குவதையே நாம் எதிர்க்கிறோம்.

இந்த அடிப்படையில் முதலாவது கட்டுரையில் புதிய மதங்களைத் தோற்றுவிப்பதற்கான காரணங்களை விளக்கினேன்.

இரண்டாவது கட்டுரையில் "கடவுளை நம்புங்கள் மதங்களை நம்பாதீர்கள்." என்ற புதிய கோஷம் இன்றைய கிறிஸ்தவ மதத்துக்குரிய சித்தாந்தமே அன்றி வேறொன்றுமில்லை என்பதை ஆதாரப்படுத்தினேன்.

இந்த வரிசையில் அடுத்ததாக "உலகின் தென்பகுதி மக்கள் ஏன் கறுப்பர்கள்" என்பது பற்றி கவனத்தில் நோக்கிடுவோம்.

உலகில் நிகழ்ந்த ஜலப் பிரளயத்தில் மனிதகுலம் முழுவதும் அழிந்து போக, நோவா, அவர் மனைவி, மூன்று பிள்ளைகளும் (சேம், காம், யாப்பேத்) அவர்களது மனைவிமார்களாக மொத்தம் எட்டுப் பேர் மட்டுமே மீதமிருந்தனர். இதில் காம் என்பவன் தந்தை நோவாவை நிர்வாணத்தில் பார்த்ததற்காக "நீ அடிமையாக இருப்பாயாக" என்று நோவாவினால் சபிக்கப்பட்டு உலகின் தென்பகுதிக்கு (தென் அமெரிக்கா, ஆபிரிக்கா, இந்தியா, அவுஸ்திரேலியா) அனுப்பப்பட்டான். இந்தக் காம் என்பவனின் சந்ததியினர்தான் இத் தென்பகுதி மக்கள் என்பது பைபிளின் கூற்றாகும். "காம் என்பவனின் சந்ததியினராக இருப்பதனையும் ஆண்டவருக்கு வாழ்க்கையை ஒப்புக்கொடாததனையுமே தென்பகுதி மக்கள் அவலமுறுகிறார்கள்." இது சாது செல்லப்பாவின் கண்டுபிடிப்பாகும்.

விஞ்ஞானம் வளர்ச்சியுற்று புராதன

www.tamilarangam.net



வரலாறுகளை, இலக்கியங்களைக் கூட விஞ்ஞான ஆய்வுகட்கு உட்படுத்துகின்ற இன்றைய 20ம் நூற்றாண்டின் அந்திமகாலத்தில் கூட இப்படியான கட்டுக்கதைகளை எப்படி நாம் நம்பமுடியும்? அப்படி எம்மை நம்பவைக்க முயல்வது கூட எமது சிந்தனையை மடமாக்கும் செயல்தானே!

உலகில் வாழும் தென்பகுதி மக்கள் (தென் அமெரிக்கா, ஆபிரிக்கா, இந்தியா, அவுஸ்திரேலியா) வடபகுதி மக்களிலும் பார்க்க கஸ்ரமுறுகின்றார்கள் என்பதைவிட பின்தங்கிய நிலைகளில் இருக்கிறார்கள் என்பதே உண்மையாகும். இதற்கான விஞ்ஞானரீதியான வரலாற்றுக் காரணங்களைச் சற்று நோக்குவோம். ஆயின் வடபகுதி (வட அமெரிக்கா, ஐரோப்பா, மத்திய ரேகைக்கு மேலுள்ள பகுதி) மக்களின் முன்னேற்றத்திற்கான காரணம் பற்றியே முதலில் கவனிக்கப்பட வேண்டியதாகிறது.

இப்பகுதிகள் கடுமையான குளிர்ப் பிரதேசங்களாக இருப்பதனால் விவசாயம், மீன்பிடி, வேட்டையாடல், போன்ற தொழில்களை வருடத்திற்கு 6 மாதங்களுக்கு மேல் தொடரமுடியாத நிர்ப்பந்த நிலையில் கைத்தொழிலின் தேவையை உணர்ந்தான் அப்பகுதி மனிதன். வேட்டையாடல், மீன்பிடி, விவசாயம் போன்றவற்றுக்குத் தேவையான கருவிகளை உற்பத்தி செய்தான். கப்பல்களைக் கட்டி நீரிலும் நீண்ட பயணத்தை மேற்கொள்ளக் கற்றுக்கொண்டான். வெப்பப் பிரதேசங்களை நாடிச் சென்ற அவன் அந்நாடுகளைக் காலனிகளாக்கிக் கொண்டான். அந்நாடுகளின் செல்வங்கள் சுரண்டப்பட்டு செல்வம் பெருக்கப்பட்டது.

உணவு தவிர குளிரில் தம்மைப் பாதுகாத்துக்கொள்வதற்கான உடைகளை நெய்வதற்கும் கட்டிடங்களை அமைத்துக்கொள்வதற்கும் கைத்தொழில் மேலும் விருத்திய்

www.tamilarangam.net



பட வேண்டியது அவசியமாயிற்று

ஒரு பகுதி மனிதன், பொறிமுறைகளையும் இயந்திரங்களையும் கண்டுபிடிப்பதிலும் கவனத்தைச் செலுத்தினான். இதனைத் தொழில்கள் இயந்திரங்களுடன் கூடிய பாரிய கைத்தொழில்களாக வளர்ச்சியுறத் தலைப்பட்டன.

மற்றொரு பகுதியினர் தத்துவ ஆய்வுகளை மேற்கொண்டனர். மதரீதியான அன்றி, மதத்துறையில் இருந்து விடுபட்டு நடைமுறை வாழ்வியலுடன் தத்துவத்தைப் பிணைத்துக் கொண்டனர். வாழ்வியலுடன் பிணைக்கப்பட்ட புதிய தத்துவங்கள் சமூக விஞ்ஞானங்களாகப் பரிணமித்தன.

நிலவுடமைச் சமூகமானது, முதலுடமைச் சமூகமாக வளர்ச்சியுடன் கூடிய மாற்றத்தை அடைந்தது. இதுவே பிரான்சியப் புரட்சி . அல்லது கைத்தொழிற்புரட்சி என்று அழைக்கப்படுகின்றது. இப்புரட்சியின் 200ம் ஆண்டு நிறைவுடன் பிரான்சில் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டமை நினைவு கூறத்தக்கதாகும்.

பூமத்திய ரேகைக்குக் கீழுள்ள உலகின் தென்பகுதியானது பெரும்பாலும் வெப்பப்பிரதேசங்கள் ஆகும். வேட்டை, விவசாயம் மீன்பிடி போன்ற தொழில்களை வருடத்தில் பன்னிரண்டு மாதங்களும் செய்யக்கூடிய பூகோள சூழ்நிலையையுடைய பகுதிகள், இத்தொழில்களை மேற்கொள்வதற்கு வேண்டிய தொழில் பொருட்களுடன், உடைகளை நெய்வதற்குரிய தறிகளையும் உற்பத்தி செய்வதற்கான சிறிய கைத் தொழில்களை மட்டும் தெரிந்து கொண்டனன். இப்பகுதி மனிதன் இயந்திரங்களுடன் கூடிய பாரிய கைத்தொழில்களின் தேவை இப்பகுதி மனிதனுக்கு உணரப்படவில்லை.

www.tamilarangam.net



மதத் தத்துவங்கள் இப்பகுதி மனிதனிடமும் மேலும் ஆண்மேலாதிக்கத்திற்கு இட்டுச் செல்கிறது. இவ் ஆணாதிக்கத் தத்துவம் வாழ்வியலுடன் இணைக்கப்படவில்லை. அதனால், புறச் சூழல்களையும், பிரித்தானிய சாம்ராச்சியத்தின் அன்றைய பலவீனத்தையும் கணக்கில் எடுக்காமல் மகாத்மா காந்தியின் சத்தியாக்கிரகப் போராட்டமே இந்தியாவுக்குச் சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுத்தது என்று பறை சாற்றப்பட்டன. இதனால் ஆண் மேலாதிக்கத் தத்துவத்திற்கு மேலும் பலம் சேர்க்கப்பட்டது. அமெரிக்காவில் மாட்டின் லூதர் கிங் வரை கறுப்பின மக்களின் விடுதலைக்கு சாத்வீகப் போராட்டமே மார்க்கமாகக் கருதப்பட்டது.

ஐரோப்பிய பிரதேசங்கள் நிலவுடைமை முதலுடைமைச் சமூக அமைப்பை அடுத்து சோசலிச சமுதாயத்தை எட்டிப்பார்த்த நிலையிலும் தெய்வசக்திகள் இன்றும் நிலவுடைச் சமூகக் கலாச்சாரங்களையே பெரிதும் பிரதிபலிக்கின்றன. இங்கனையே காலனியாதிக்கத்தின்கீழ் கனிவளங்கள் சுரண்டப்பட்டதையும் மேலும் தொடர்ந்து சுரண்டுவதற்கான வாய்ப்புகளை (அமைப்புகளை) ஏற்படுத்திக் கொண்டதையும், இப்பகுதிகள் தொடர்ந்து வறியநாடுகளாகவே மாறிக் கொண்டிருக்கின்றன.

இன்று உலகின் பொது நிதி நிறுவனம் என்று கருதப்படுகின்ற பன்னாட்டுக் கம்பனிகள் உலகவங்கி ஆகியவற்றினையும், இங்கனமே கூறப்பட்டது போன்று மேலாதிக்க வல்லரசுகளினதும் கொள்கைகள் காரணமாகவும் இந்நாடுகளும் நாட்டுமக்களும் மேலும், மேலும் பின்தங்கிய நிலமைகளுக்குத் தள்ளப்படுகின்றன.

ஆகவே இன்றும் உலக நாடுகளின் தேசிய விடுதலைப் போராட்டங்களையும், போராட்ட உணர்வுகளை

www.tamilarangam.net




யும் கருப்பந்தான பௌதிக வல்லரசுகளின் சதித்திட்டங்கள் பலவற்றில் இத்தகைய மதப்பிரச்சாரங்களும் ஒர் அங்கம் என்பதனை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

இதேவிதமாக இந்திய ஆளும் வர்க்கத்திற்கெதிரான மக்களின் போராட்ட உணர்வினைக் கருக்கிவிடுவதற்கான ஒர் முயற்சியாக அரசின் உதவியுடன் "சிவசேனை" "ஆர். எஸ். எஸ்' போன்ற இந்து மதவெறி ஸ்தாபனங்கள் தோற்றம் பெற்றுள்ளன. இலங்கையில் இவ்வெறி ஸ்தாபனங்களாக சில பௌத்தமத பீடங்கள் உள்ளன என்பதும் நாம் அறிந்ததே.

சமூகத்தின் மக்களின் விடுதலைப் போராட்ட உணர்வினை மழுக்கிவிடவும் இளைய தலைமுறைகளின் சிந்தனைப்போக்கினை மடமாக்கி விடுவதற்குமான அனைத்துப்பிரச்சாரங்களையும் (அவை எந்தமதத்தில் இருந்து எந்த வடிவத்தில் வந்தாலும்) கண்டிக்க வேண்டியது சமூகப் பொறுப்புணர்வுள்ள ஒவ்வொருவரினதும் கடமையாகும்.

(முற்றும்)

வி. லோகதாஸ்



மூன்றாம் உலக நாடுகளிற்கு சிறு உதவிகளை வழங்கி பல வழிகளிலும் ஒட்டச் சுரண்டும் அமெரிக்க, மேற்குலக நாடுகள்.

www.tamilarangam.net

*Nur Für Freundkreis*

## சந்தா விபரம்

தனிப்பிரதி - 3 SFr

சுவிஸ் உட்பட ஐரோப்பியநாடுகளுக்கு

ஒரு வருடம் : 20 SFr

ஆறு மாதம் : 10 SFr

(தபால் செலவு உட்பட)

வாசகர்களே!
விமர்சனங்களையும்
ஆக்கங்களையும்
வரவேற்கிறோம்!

• ஆ-ர் குழு •

## முக்கிய அறிவித்தல்

"மனிதம்" முகவரி மாற்றப்பட்டுள்ளதால் புதிய முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.


'MANITHAM'
POST FACH-12
3000 BERN-11
SWITZERLAND

அறிமுகம்




வ.ஐ.ச.ஜெயபாலன் தம்பா கலிஸ்ரா
தமயந்தி வயவைக்குமரன் மைத்ரேயி
இளவாலை விஜயேந்திரன்

<கவிதைத் தொகுதி>




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# . துப்பாக்கி மௌனம் .

சந்தையில்லா
இடங்களில்
சனக் கூட்டம்

தெருவில்
பாடங்களை மறந்த
பள்ளிச் சிறுவர்கள்

மீண்டும் விழுவதற்காய்
நிமிரும் மின்கம்பம்

மீண்டும்
பெரும் புயலுக்காய்
சருகுகளை
இழுத்துச் செல்லும்
மெல்லிய குளிர்காற்று

பக்கத்துத் தெரு
மீண்டுமொரு முறை
பரிட்சயம் அற்றுப்போகும்.

சூர்யா.